ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஎ | யாழ்ப்பாணம்:— யுவ௵ மாசிமீ ௨௨௳ (1936 மார்ச் 5) வியாழக்கிழமை | இலக்கம்—அஅ

## மலாய் நாட்டில் ஆசியாக்காரர் நிலை.

### அரசாங்கத்தில் நிர்வாகவேலை இல்லையாம் சட்டசபையில் ஸ்ரீ வீராசாமி கண்டனம்

### மலாய்நாடு மலையருக்குத்தானாம்!

ஐக்கிய மலாய்நாட்டு அரசாங்க நிர்வாகத்தில் மலேயர் அல்லாதவரை நிர்வாக ஸ்தானங்களில் நியமிப்பதுபற்றி மேன்மைதங்கிய "ஹைகமிஷனர்" செய்த கூற்றைக் கண்டித்துச் சட்டசபை அங்கத்தவரான ஸ்ரீ வீராசாமியவர்கள் பின்வருமாறு கூறினர்:—

இச்சபையின் சென்ற கூட்டத்தினபோது எனது கௌரவ சிநேகிதர் மிஸ்டர் லெய் டெட் லோக் கேட்டதொருகேள்விக்கு கூறினால் மலேயரல்லாதார்களுக்கு ஒரு நிர்வாக சபை உண்டாக்கியமயில்லையென்று பதிலளிக்கப்பட்டது. சென்ற 1934ம் ஆண்டு அக்டோபர் மாசம் 23ம் தேதியன்று இச்சபையின் கூட்ட மொன்றில் கௌரவ டாக்டர் கிருஷ்ணன் எழுப்பிய மிகப்பெரிய கேள்வி யொன்றில் இக்கேள்வி ஒரு தோற்றத்தை மட்டுமே குறிப்பிடுகிறது.

"இப்பொழுதுள்ள பிரச்சினை யென்னவெனில் இந்நாடுகளில் குடியேறியிருக்கும் சமூகங்களின் நிலையும் ஸ்தானமும் என்ன? 'குடியேறியிருக்கும் சமூகங்கள்' என்றால் இங்கு ஒரு தலைமுறைக்கு மேலாகவே வசிக்கிறவர்களும், அவர்களது குழந்தைகளும், குழந்தைகளின் குழந்தைகளும் இங்கேயே பிறந்தவர்களும், இந்நாட்டைத்தவிர வேறு எதையும் தங்களது தாய்நாடெனச் சொல்ல முடியாதிருக்கிறவர்களும், அவர்களது ஆதிநாட்டின் பந்தத்தவை எல்லாவற்றையும் வெட்டிவிட்டவர்களும், சுருக்கமாக தங்களது வீடாகத் தங்களது ஒரேவீடாக இந்நாட்டைக் கொண்டுள்ளவர்களுமான மலேயரல்லாத சமூக அங்கத்தவர்களென்று நான் அர்த்தங்கொள்ளுகிறேன்.

"பிரிட்டிஷ் ராஜ்யத்தில்பிறந்த எவரும் ஒருபிரிட்டிஷ் பிரஜையாவனென்று ஆங்கிலச் சட்டத்தின் விதியொன்றிருக்கிறது. கடலில் மிதக்கும் ஒரு பிரிட்டிஷ் கப்பலில் பிறக்கும் ஒரு ஜூலுவாசியோ அல்லது ஒரு ஹாட்டன்டாட் வாசியோ அவன்கூட ஆங்கிலச் சட்டப்படி பிரிட்டிஷ் பிரஜையாகிறான். அவனுக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்து சபையில் உட்கார உரிமையிருக்கிறது; மேலும் அவனுக்குத் திறமையிருப்பின் பிரிட்டிஷ் பிரதமமந்திரியாகக்கூட வரலாம். இது ஒரு உலகம். பரந்த விதியும் சட்டமுமாக உலகிலுள்ள ஒவ்வொரு நாகரீக நாட்டிலும் இருக்கிறது. அவ்விதியை இந்நாட்டிலும் ஏற்படுத்தின பிறகு இங்கு பிறந்தவர்களெல்லோரும், அவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களென்பதைப் பற்றிக் கவலையில்லை, ஜனன உரிமைப்படி மேன்மை தங்கிய சுல்தான்களின் பிரஜைகளாகிறார்கள். நியமப்படி மலேயப்பிரஜைகளுக்கும் மலேயரல்லாத பிரஜைகளுக்கும் வித்தியாசம் எடுத்துக்கொள்ள முடியாது. அவர்களெல்லாம் ஒரே ராஜனின் பிரஜைகள், ஒரே உரிமைகளையும், ஒரே சுதந்திரங்களையும் அனுபவிக்கிறார்கள். இருவருக்கும் மத்தியில் வித்தியாசம் பாராட்டுவதும், ஒருவரை மற்றொருவரைவிட உயர்ந்த சுதந்திரமான இடத்தில் வைப்பதும் இராஜீய நியமமல்லாததும், நியமப்படி இல்லாததாகும். அம்முறை ஐக்கியமில்லாமைக்கும், முரண்பாட்டிற்கும் பாதை காட்டுகிறது.

### சர் சாமுவேலின் வாக்குறுதி

"ஸர் சாமுவேல் வில்ஸன் சில வருஷங்களுக்கு முன்பு இந்நாட்டில் விஜயம் செய்தபொழுது அவரிடம் சென்ற ஒரு ஆசியாக்காரர்கள் பிரதிநிதி கோஷ்டிக்கு நான் தலைமை வகித்தேன். அக்கோஷ்டியில் சகல ஆசியா சமூகங்களையும் சேர்ந்த முக்கிய கனவான்கள் சேர்ந்திருந்தனர். அப்பொழுது பேசப்பட்ட விஷயங்களெல்லாம் நான் இப்பொழுது உங்களிடம் பேசுவதைப் பற்றியே யிருந்தது. குடியேற்ற சமூகங்களின் கோரிக்கைகளுக்கு ஸர் சாமுவேல் வில்ஸன் மிக்க அநுதாபப்படுவதாகக் கூறிவிட்டு அவர்களுக்காக தன்னால் இயன்றவரை செய்வதாக வாக்களித்தார்.

"ஸர் சாமுவேல் வில்ஸன் வந்து போய் வருஷங்கள் கடந்துவிட்டன. ஒன்றும் காரியத்தில் காணோம். பெரும் அதிருப்தியான உணர்ச்சி மேம்பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்காமலிருக்கும் ஒரு ஆசியா கனவான் கூட இந் நிபசுறபம முழுவதிலுமில்லை. இம்மாதிரியான அவநம்பிக்கைகளைத் தணிப்பதும், அதிருப்தி மேம்படாதபடி தடுப்பதும் விவேகமுள்ள இராஜநீதியின் கடமையாகும்.

"நான் இன்று உங்களைக் கேட்பதெல்லாம் என்னவெனில் நீங்கள் இவ்விஷயம்பற்றித் தீவிரமாகவும், கடுமையாகவும் சிந்திக்கிறதாகக் கொடுக்கும் ஒரு உறுதியே. ஏனெனில் நீங்கள் அப்படிச் செய்யின், இந்நாட்டிற்கு நல்ல பொருத்தமுள்ள ஒரு பெரிய சமூகத்திற்கு நீங்கள் நீதி வழங்கத் தவறமாட்டீர்களென்று நான் நிச்சயமாயிருக்கிறேன்."

### ஹைகமிஷனரின் பதில்

இப்பிரச்சினை எழுந்த தென்றப் இதை நன்கு சிந்திக்கவேண்டுமென்றும் அரசினர்க்கு நன்கு தெரிந்திருக்கிறது என்பதற்கு அதிகமான ஒரு பதிலை தன்னால் அளிக்க முடியாதவாறு மிஸ்டர் வீராசாமி ஒரு பெரிய கேள்வியை எழுப்பிவிட்டாரென்று மிஸ்டர் ரெக்ஸ் சொன்னார்.

மேன்மை தங்கிய ஹைகமிஷனரவர்கள் பதிலளிக்கையில் சொன்னதாவது:—

"நான் இவ்விஷயம் பற்றிச் சிந்திக்கிறேன். ஆனால் ஐக்கியமலாய நிர்வாக ஸ்தானங்களில் மலேயரல்லாதார்களை நியமிக்கும் பிரேரணையை நான் ஆதரிப்பேனென்று மிஸ்டர் வீராசாமியையும் அவர் யாருக்குப் பிரதிநிதியாக இருக்கிறாரோ அவர்களையும் ஒரு நம்பிக்கையுடன் இருக்கும்படி ஆசைகாட்டுவது நியாயமல்ல.

"நான் வேலைபார்த்த நாடுகளில் இது ஆறாவது நாடாகும். இவைகளில் எந்த ஒரு நாட்டிலாவது தாய்நாட்டினரல்லாதாரும் ஆங்கிலேயர்களல்லாதாரும் நிர்வாக ஸ்தானங்களில் எப்பொழுதாவது நியமிக்கப்பட்டதை நான் அறியவில்லை.

ஆகையால் அவ்வித ஒரு பிரேரணையை என்னால் இப்பொழுது இங்கு ஆதரிக்க முடியாதென்று கூறுவதில் எவ்விதப் பிசகுமில்லையென்று நான் நினைக்கிறே"னென்றார்.

## பிரிட்டிஷ் ஆயுதப் படைகளின் பலம்.

1913ம் வருஷத்தில் இருந்த பிரிட்டிஷ் படைகளின் தொகை மொத்தம் 697,119. பிறகு 245,666 அதிகாரிகள் வரை குறைக்கப்பட்டது. எனவே தற்போது பயிற்சி பெற்ற போர்வீரர்களும் எக்ஸ்ப்புற சாவறபடைகளும் 'ரிஸர்வ்' படைகளுமாக மொத்தம் தொகை 451 453 ஆகும். இவைகளைப்பற்றிய பூழு விவரம் வருமாறு:—

| | 1913 | 1936 |
|---|---|---|
| பயிற்சிபெற்ற படைகள் | 247,250 | 193,652 |
| சாவற்படைகள் | 245,779 | 139,147 |
| ரிஸர்வ் படைகள் | 145,090 | 109,129 |
| விசேஷ ரிஸர்வ் | 59.000 | — |
| உதவி ரிஸர்வ் படைகள் | — | 19,525 |
| மொத்தம் | 697,119 | 451,453 |

மேற்கண்ட மொத்த பயிற்சி பெற்ற 193,632 போர் வீரர்களில் 57,658 பேர்கள் வரை இந்தியாவில் வைக்கப்பட்டுள்ளனர். இது போக பாக்கியுள்ளவர்களைத்தான் எகிப்துக்கும், காலனி நாடுகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளவேறு சில நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப் படவேண்டும்.

## மங்கையின் கொலை மாணவன் கடிதம்.

### மட்டக்களப்புமங்கை மரணித்தது எவ்வாறு? வாவியிற்கண்ட பொலிசின் சாட்சியம்.

### கிழித்தகடிதத்தைப் பொருத்தி வாசித்தார்! மகனுக்குத் தந்தையின் பிரம்படி;

(நமது சொந்த நிருபர்)

மட்டக்களப்பு உதவிப் பிஸ்கால் உத்தியோகத்தரான ஸ்ரீ K. S சந்திரசேகரம்பிள்ளையின் மனைவியான (1) மங்கையர்க்கரசி (2) சவரி (3) வியந்தாரசபிள்ளை (4) K. S. சந்திரசேகரம்பிள்ளை என்னும் நால்வரும் 1ம் 4ம் எதிரிகளின் வீட்டில் வேலைசெய்திருந்த விகாசித்தம்பி சின்னமுத்து என்னும் கன்னிகையைக் கொன்ற அக்குற்றத்தை மறைக்க முயற்சித்தார்கள் என்று மட்டக்களப்பு பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு சென்ற வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது கறுப்பன் என்னும் பொலிஸ் பின்வருமாறு சாட்சியங் கூறினர்:—

"சின்னமுத்துவின் பிரேதம் முகம் மேலே பார்த்தபடி வாவிக்குள் கிடப்பதை நான் கண்டேன். தேகத்தில் சிவப்பு நிறச்சேலை யுடுத்தியிருந்தது. வெள்ளை நிற இரவிக்கையும் இருந்தது. சேலையும் சட்டையும் ஊசியாற் குற்றி ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தன.

"முழங்காலுக்குச் சமீபமாகச் சேலை ஊசியாற் குற்றப்பட்டிருந்தது எனவே அவள் நடந்து வந்திருக்கமாட்டாள் என்று நான் யூகிக்கின்றேன்; நான் பிரேதத்தைக் கூர்ந்து அவதானித்தஅளவில் கன்னத்தின் இடது பக்கத்தில் ஓர் கறுத்த அடையாளம் காணப்பட்டது. அது அடிகாயம் போல எனக்குத் தோற்றினது.

"பிரேதத்தின் செவிகள் கிழிக்கப்பட்டிருந்தன அவற்றை மீன்கள் ஒரு சமயம் தின்றிருக்கலாம். முகத்தில் வேறு காயங்களை நான் காணவில்லை. இடது கையிலும் ஓர் காயத்தை நான் கண்டேன்.

"நான் இது விஷயமாகப் புலன் விசாரிக்கச் சென்றபோது உதவிப் பிஸ்கால் உத்தியோகத்தரின் வேலைக்காரக்கன்னி காணாமற் போய்விட்டாள் என்று ஊராசொல்வது என் காதிற் படவில்லை."

### என்ன கடிதம்?

டிெ பிஸ்கால் உத்தியோகத்தர் வீட்டில் இதுகாறும் வேலைக்கிருந்த வேலப்பொடி காத்தமுத்து என்பவன் பின்வருமாறு அடுத்ததாகச் சாட்சியம் பகர்ந்தான்:—

"இப்போது நான் வேலைக்காரனுமல்ல அங்கேயில்லை நேற்றைத்தினமே, நான் அவர்களைவிட்டு நீங்கிவிட்டேன் 1-ம் 4-ம் எதிரிகளைவிட அந்த வீட்டில் இறந்த சின்னமுத்து, நான், செல்லமுத்து என்பவள் 1-ம் 4-ம் எதிரிகளின் பிள்ளைகள் என்பவர்களே வசித்தார்கள் இப் பிள்ளைகள் இருவர் பள்ளிக்கூடஞ் செல்பவர்கள்; பெப்ரவரிமாதம் 18ம் தேதிராவே சின்னமுத்து காணாமற்போனாள்.

"முந்திய வெள்ளிக்கிழமை, பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் வந்தபொழுது ஏதோ பொரிக்கும்படி 1-ம் எதிரியான மங்கையர்க்கரசி கூறினார்! அந்த நேரத்தில் சின்னமுத்து ஏதோ கடிதம் ஒன்றைப் படித்துக்கொண்டு நின்றாள்; அப்போது மூத்தபையன் ஓடிவந்து, அக்கடிதத்தைப் பறித்தான்; அதில் ஓர் பாகம் அவன் கையில் வந்தது அவன் அதனைத் தன் தாயிடம் கொண்டுபோய்க் காட்டினான். கையில் இருந்த கடிதத்தின் மறுபாகத்தைச் சின்னமுத்து நெருப்பில் போட்டுவிட்டாள்.

"தன் மகன் கொடுத்த கடிதத் துண்டுகளை ஒன்றுபொருத்தி மங்கையர்க்கரசி வாசித்தார். 4ம் எதிரி கந்தோரால் வந்ததும் 1ம் எதிரி தன்னிடம் அகப்பட்ட கடிதத்தை அவர்க்கு வாசித்துக் காட்டினார். அன்று இரவு ஸ்ரீ சந்திரசேகரம் தமது 2ம் மகனை அழைத்து இப்படி ஏன் கடிதம் எழுதினாய்? என்று அவனுக்குப் பிரம்பால் அடித்தார்"

இதன் பின்னர் நீதிபதி வழக்கைத் தவணையிட்டு முதல் 3 எதிரிகளையும் விளக்கமறியலில் வைத்தார். 4ம் எதிரி 2000 ரூபாப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

## ஹரிஜனங்களுக்கு மந்திர தீக்ஷை.

லாகூர் சநாதன தர்ம பிரதிநிதி சபையின் ஆதரவில் ஆலயந்துக்கு எதிரே ஹரிஜனங்களுக்கு மந்திர தீக்ஷை செய்யப்பட்டது. அப்போது பண்டித விஷ்ணு சுக்லா, லாலா சிவராம், பண்டித முகுந்த மாளவியா சநாதன தர்மத்தின்உண்மையை எடுத்துச்சொன்னார்கள். மந்திரதீக்ஷைக்குப் பின் ஹரிஜனங்கள் தேவ தரிசனஞ் செய்து பிரசாதம் பெற்று வீட்டுக்குத் திரும்பினர்.

# பாலர்பகுதி.

## எனது அன்புமிக்க மருமக்களே!

உங்களுக்குச் சில நாட்களுக்கு முன்னர் அரசாங்கசபையைப்பற்றியும், அந்தச் சபைக்குப் போக இருப்பவர்களைப்பற்றியும் சொல்லித் தந்திருக்கிறேன் அல்லவா? எமது யாழ்ப்பாணப் பகுதியிலே, அந்தத் தெரிவு போனகிழமையுடன் முடிந்து விட்டது.

ஊர்காவற்றுறைப் பகுதிக்கு ஸ்ரீமாக். வை. துரைசுவாமி என்பவர்க்கு மாறாக ஒருவரும் நிற்கவில்லை. ஆனபடியால், அவரே அரசாங்கசபைக்கு, ஒருவித செலவும் இன்றித் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் — தென்மராட்சிப் பகுதிக்கு ஸ்ரீமாக். அ. மகாதேவா என்பவரும், ஸ்ரீமாக். நெவின்ஸ் செல்வத்துரை என்பவரும் போட்டியிட்டனர். போட்டியில் ஸ்ரீமாக் மகாதேவாவே வெற்றிபெற்றிருக்கிறார்.

பருத்தித்துறைப் பகுதிக்கு ஸ்ரீமாக். க. பாலசிங்கம் என்பவரும், ஸ்ரீமான் ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்பவரும் போட்டியிட்டனர். கடைசியில் ஸ்ரீமான் பொன்னம்பலமே வெற்றியுற்றார்.

காங்கேசன்துறைப்பகுதிக்கு ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை என்பவரும் ஸ்ரீமான் அ. பொன்னையா என்பவரும் போட்டியிட்டனர். ஸ்ரீமான் நடேசபிள்ளைக்கே வெற்றி கிடைத்தது.

ஆகவே, இப்போது இந்த வட பகுதிக்கு நாலுபேர் அங்கத்தவர்களாக ஊர்ச் சனங்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஸ்ரீமாக துரைசுவாமி, ஸ்ரீமாக் மகாதேவா, ஸ்ரீமாக் பொன்னம்பலம், ஸ்ரீமாக். நடேசபிள்ளை என்பவர்களே அந்த நால்வருமாகும். இவர்கள் அரசாங்கசபையிலே, எமக்காகப் பாடுபடவேண்டும்.

---

## இது தெரியுமா?

எனது அருமை மருமக்களே, கொழும்பு வடக்குப் பகுதிக்கென அரசாங்கசபைத் தேர்தல் நிகழ்ந்தது. அதில் வெற்றி பெற்றது யார் தெரியுமா? ஓர் பெண்மணியே வெற்றிபெற்றார். இந்தச் செய்தி எனது மருகிகளுக்குச சந்தோஷம் கொடுக்கும். இல்லையா? இந்தப் பெண்மணியின் பெயர் ஸ்ரீமதி நேசம்மா. இவர் டக்டர் சரவணமுத்து என்பவரின் மனைவியாவர். இவருக்கு எதிராக மூன்று ஆண்பிள்ளைகள் நின்றும், அவர்களை இப் பெண்மணி தோற்கடித்தார். எனது அருமை மருகிமாரே, நீங்களும் படித்து, அறிவுபெற்று ஸ்ரீமதி நேசம்மாவைப்போல அரசாங்கசபை அங்கத்தவர்களாக வர முயலுதல்வேண்டும்.

---

## காங்கிரஸ் மகாசபை.

மகாத்மாகாந்தி காங்கிரஸ் மகாசபையிற் சேர்ந்து தீண்டாமை, மதுபானம், என்பவற்றை இந்தியாவினின்றும் நீக்குதற்குப் பாடுபட்டார் என்று நான் சென்றமுறை உங்களுக்குச் சொல்லித் தந்தேன அல்லவா? இனி, இவர் கைக்கொண்ட அகிம்சையைப்பற்றி இன்று சொல்லித் தருகின்றேன், கேளுங்கள்.

### அகிம்சை.

எனது அன்புமிக்க மருமக்களே, உலகில் உள்ள ஜீவராசிகள் யாவும் ஒரே கடவுளின் சேயர்கள்தான், குழந்தைகள்தான்; ஆனபடியால் நாம ஒரு உயிரையும் வருத்த வொண்ணாது: எம்மவரிற் சிலர் மீன், ஆடு, கோழி முதலியனவற்றைக் கொன்று தின்கின்றார்கள். ஐயோ, இது எவ்வளவு பாவம்!




பிள்ளைகளே, எங்கள் தேகத்தில் யாரும் கேலிக்குக் கிள்ளினுல், அல்லது ஓர் கட்டெறும்பு கடித்தால் எவ்வளவாக நோகின்றது. அப்படியானுல் வாயில்லாப் பிராணிகளான ஆடு கோழி மீன் என்பவற்றைக் கொல்லும்போது, அவைக்கு எவ்வளவாக நோகும். அவை எவ்வாறு துன்பப்படும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஒரு உயிரையும் கொல்ல வொண்ணாது; கொன்று தின்ன வொண்ணாது. ஆடு கோழிகளை மாத்திரமன்றி, மனிதரைத்தானும் நாம் வருத்த வொண்ணாது.

நாம் ஒருவரை இருவிதமாக வருத்தலாம். ஒன்று தடி, கத்தி, துப்பாக்கி முதலியன கொண்டு ஒருவர் தேகத்தைத் தாக்கி வருத்துவது. மற்றது நாவினுல் வருத்துவது. நாம் ஒருவரை ஏசினுல் அவர் எவ்வாறு வருந்துவார்? நாம கண்டபடி ஓர் ஏழையைத் தூஷித்தால் அவர் மனம் துடிதுடிக்கும் அல்லவா? ஆனபடியால் நாம் ஒருவரையும நோகவிடக்கூடாது. நாம் எல்லாரிடத்தும் அன்பாயிருக்கவேண்டும். ஒருவர்க்கொருவர் அன்புடன் இருந்தால் ஒற்றுமை யுண்டாகும். ஒற்றுமை யுண்டானுல் பலம் உண்டாகும். பலம் வந்தால் சுயராச்சியம் பெறலாம். அகிம்சை, அன்பு என்பன ஒரே கருத்துக்கொண்ட சொற்களே.

### கதர்.

எனது அருமை மருமக்களே,

நீங்கள் வேட்டி, சட்டை அணிந்திருக்கிறீர்கள்! மருகிகள் நல்ல நிறச் சட்டைகள் அணிந்திருக்கின்றனர். ஆனுல், இந்தச் சட்டைகள் செய்யும் துணிகள் எங்கிருந்து வந்தனவென்பது உங்களுக்குத் தெரியுமா? எங்கள் நாட்டிற் செய்யப்பட்டனவா? இல்லை! இந்தத் துணிகள் இங்கிலாந்து, ஜப்பான், சீனு முதலாம் நாடுகளில் இருந்தே இங்கு வந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றை நாங்கள் விலைக்கு வாங்கி அணிகின்றேம். இத்துணிகளின் பொருட்டு நாங்கள் பல கோடிக்கணக்கான ரூபாய்களை அந்நிய நாடுகளுக்கு வாரி வாரியிறைக்கின்றேம்; இந்தக் கோடிக்கணக்கான ரூபாய்களில் ஒரு சதமேனும் எமது நாட்டில் நிற்பது இல்லை. ஒரு சதமாவது எம்நாட்டில் உள்ளவர்களுக்கு உபயோகப்படுவது இல்லை. எல்லாம் வெள்ளைக் காரர்க்கும் ஜப்பான், சீனுக்காரர்க்குமே செல்கின்றன. எமது நாட்டிலே இந்தத் துணிகளைச் செய்தால் இந்தப் பணம் எல்லாம் எமது நாட்டிலேயே நின்றுவிடும் அல்லவா! இதனை மகாத்மாகாந்தி உணர்ந்தார். அவர் இந்தியாவில் உள்ளவர்களை நோக்கி, "எனது அருமைச் சகோதரரே! நீங்கள் அந்நியநாட்டுத் துணிகளை வாங்கவேண்டாம்; வாங்கி அவற்றை அணியவேண்டாம்; நீங்களே உங்கள் உங்கள் வீடுகளில் ராட்டினத்தில் நூல் நூற்று, அந்த நூலைத் தறியில் நெசவு செய்து துணி உண்டாக்கி, அதனை அணியுங்கள்" என்று சொன்னுர். இப்படி ராட்டினத்தில் நூற்ற நூலைக் கொண்டு நெசவு செய்து ஆக்கப்பட்ட துணியே கதர் எனப்படுவது. இந்தக் கதர்த்துணியை என் மருமக்களில் அநேகர் கண்டிருப்பர்; அநேக மருமக்கள் அணிந்திருப்பார்களென நம்புகிறேன். மருமக்களே, இந்தக் கதரைத்தான் முற்காலத்தில் நாம் பாவித்து வந்தோம்; ஆனுல் இப்போது இங்கே கதர் செய்வது இல்லை.

கதர் உற்பத்தியாக்க வேண்டும் என்று மகாத்மாகாந்தி வற்புறுத்தினுர். அதன் பயனுக, இப்போது இந்தியாவின் அநேக இடங்களில் கதரே அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

### அந்நியப் பொருள் பகிஷ்காரம்.

எனது அன்புமிக்க மருமக்களே,

எங்கள்வீடுகளில் பொருள்கள்அநேகம் இருக்கின்றன; கட்டில், மெத்தை, பீங்கான், கோப்பை, சட்டி, பானை, சவர்க்காரம், புசர்மா, கண்ணுடி, என்பனவே அவை. இவற்றிற் பெரும்பாலும், எம் நாட்டிற் செய்யப்படுவனவல்ல; எல்லாம் அந்நியநாட்டுப் பொருள்களே; இப்பொருள்களுக்காக நாம் வருஷா வருஷம் பல ரூபாய்களை அந்த அந்நிய தேசங்களுக்கு அனுப்புகின்றேம். இந்தப் பொருள்களை நாம் இங்கேயே செய்ய வேண்டும்; இப்பொருள்களை நாம் வாங்க வேண்டும் என்று மகாத்மாகாந்தி கூறினுர். மகாத்மா கூறிய உண்மையினை ஜனங்கள் கேட்டனர்; அதன்படி நடந்து வருகின்றனர். இதனுல் இப்போது இந்தியாவிலே அந்நியப் பொருள்கள் விற்பனையாவது மிகவும் குறைந்து விட்டது.

மருமக்களே, இன்று இவ்வளவுடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்; அடுத்தமுறை மகாத்மாகாந்தி செய்த சட்டமறுப்பியக்கம் என்பதைப்பற்றிச் சொல்லித்தருகிறேன்.

---

## மருமக்கள் பகுதி.

201. பொ. நடராயகம்: எனது அருமை மருமகனே! கலங்காதே, மனவருத்தப்படாதே; அனுப்பிவிடுகின்றேன். 15 வயது உள்ளவரைச் சேர்க்க மாட்டேன்.

க. புவனேஸ்வரி (காவேட்டி) இலக்கத்தைக் குறித்து அனுப்பவேண்டும். சில காலம் பல வசதியீனங்கள் ஏற்பட்டபடியால் நீ கூறியபடி செய்ய வில்லை. மருகியே அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். கடவுள் கிருபையால் எல்லாம் இனிச் சரிவர நடக்கும் என்று நம்புகின்றேன். ஆ! கவனமாய்ப் படிக்க வேண்டும். முதற் பிள்ளையாய்ப் பரீட்சையிற்சித்தியெய்த வேண்டும்.

"சுப்புமாமா" அவர்கள்,
தலைவர், இந்துசாதனப் பாலர்சங்கம்,
யாழ்ப்பாணம்.

மாமா,
தயைசெய்து என்னையும் தங்கள் சங்கத்திற் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஒவ்வொரு நல்ல காரியமாவது செய்வேன்.

பெயர்..............
வயது..............
படிக்கும் வகுப்பு..............
வித்தியாசாலைப் பெயர்..............

இங்ஙனம்
உங்கள் வாஞ்சையுள்ள
சுப்புமாமா.

---

# உலகம் பலவிதம்.

"மனமுவிட்டும் துவானம் மாறவில்லை" என்றவிதமாக, பிரதிநிதித் தேர்தல் இந்த யாழ்ப்பாணப் பெருநாட்டினில் முடிந்தும், தேர்தலினுல் அந்தத் தேர்தல் காலத்தில் சேர்ந்த பிணக்கு மனஸ்தாபம் குரோதம் விண்பேச்சு அடி பிடி சண்டை முதலிய அனர்த்தங்கள் இன்னமும் ஒழிந்தபாடில்லைப்போலும். தேர்தல் நிறைவேறிவிட்டது; வென்றார் ஊர்வலமாகப் பவனி வருதும் உபசாரக் கூட்டங்கள் கூட்டுவித்தும் ஆநந்தங் கொண்டாடுகின்றனர்; தோல்வியுற்றார் தாம்பட்ட சிரமத்தையிட்டுக் கவலைப்பட்டும், செலவிட்ட பணத்தைக் குத்துக் கணக்கிட்டுப் பார்த்து ஏக்கங்கொண்டும் சிலர் மூளையும் பிசக விட்டு விட்டனராம் இந்தத் தேர்தற் கருமத்தில் ஒருவர் வெற்றி பெற மற்றவர் தோல்வியுறுவது நிசமென்பதை இவர்கள் புத்திச் சிந்திக்காது இரு அபேட்சகரும் வெல்ல இடமுண்டு என்று விபரீதமாய் எண்ணி விட்டனர் போலும்.

* • *

தேர்தல் முடிந்து சிலநாட் சென்ற பின்னரும், தத் தமக்குச் சார்பான அபேட்சகர்கள் பொருட்டு வேலை செய்த விடத்துக் குரோதங்கொண்ட எதிர்க்கட்சிக் காரருட் சிலர் வடமராட்சி வலிகாமப் பகுதிகளில் இன்றைக்கும் பேசுப்பட்டுக் கைபரிமாறி ஒருவர்க்கொருவர் வசைகளைச் சண்டையிடுகிறார்களாம். இஃது என்ன விபரீதம்; தென்மராட்சிப் பகுதியில் ஒருஅபேட்சகர்பொருட்டு முயற்சி பார்த்த ஒருவர், தமது வாரக்காரர் தமக்குக் கீழ்ப்பட்டவர்களாயுள்ளார் தம்முடைய எதிர்க்கட்சி அபேட்சகர்க்குச் சம்மதஞ் சொல்லிவிட்டனரென்று அறிந்து ஆத்திரங்கொண்டு, அந்த வாரக்குடிகளைத் தம்முடைய காணியிற் குடியிருக்க வொண்ணாது என்றும் பயிர் செய்ய வொண்ணாது என்றும், தமக்குரிய நல்ல தண்ணீர்க் கிணற்றில் வந்து தண்ணீர் மொள்ள வொண்ணாது என்றும் சொல்லித் தடுக்கின்றாராம். இது உண்மையானுல், நியாயம் அறிந்தவரென்றிருக்கும் அவர் அப்படிச் செய்தல் முறையல்லவே. அன்பால் எவரையும் இலகுவில் வெல்லலாம். வன்பால் வெல்லமுடியாது என்பதை இவர் உணர்ந்திலர் போலும்.

"இன்னுசெயினும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்ற திருக்குறளை இப்படிப் பட்டவர் எந்நேரமும் பாடம் பண்ணிக் கொள்ளுதல் ஆவசியகமாகும்.

* • *

அபேட்சகராய் நின்றார் நிலை இப்படியாக, இந்த அபேட்சகர்பொருட்டு மனப் பூர்வமாகப் பாடுபட்டு ஓடியாடித் திரிந்து உழைத்தவர்களுக்குத் தான் சங்கடங்களும், வென்ற பக்கத்தினர்க்குச் சரீர வருத்தமும் தோற்ற பக்கத்தினர்க்குச் சரீர வருத்தத்தோடு மனவருத்தமும் அதிகமெனலாம். இப்படி உழைத்தவருட் சிலர் தேர்தற்றினத்துக்கு முந்தியே நோய் கண்டு பாயிற் படுத்து விட்டார்கள். சிலர் தேர்தல் நிகழ்ந்த அடுத்தநாட் பாயிற் படுத்து விட்டார்கள்; நாது யாழ்ப்பாண மக்களுட் பலர் இந்தத் தேர்தற் கருமம் ஒன்றில் தான்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயினர்"

என்ற பாட்டிற்கு இலக்கியமாக உழைத்திருக்கிறார்களென்று சொல்லலாம். இப்படி ஏனைய நற்கருமங்களிலும் ஈடுபட்டு உழைக்கத் தலைப்படுவரேல் நமது யாழ்ப்பாண மக்களுக்கு எதால் குறைவுபாடு வருதல் முடியுமா?

* • *

இந்தத் தேர்தல்கள் காரணமாகப் பிதாவுக்கும் பிள்ளைக்கு மிடையே பிணக்கு, தமையனுக்கும் தம்பிக்கும் சண்டை, உற்ற சிநேகிதருக்கு இடையே மனஸ்தாபம், பிள்ளைகளுக்கும் தாயாருக்கும் இடையே பிரிவினை, புருஷனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் முதலானவைகள் விளையலாயின என்று முருகேசு சொல்லுகிறார் "ஐயோ, ஐயா! நான் சிவப்புக்குட்போட, நீர் எப்படிப் பச்சைக்குட் போடலாம்; உம்மைச் சரிப்பண்ணிக் கொள்ள மாட்டாத நான் ஊரவர்களைச் சரிப்பண்ணுவது எப்படி? நீர் இப்படி எனக்குச் சதி செய்வீர் என்று உம்மை நான் கனவிலுங் காத்திருக்கவில்லை' என்று சிறிது சுடுகிந்துச் சொன்னு ஐயா; "இந்தக் காரியத்தில் நீங்கள் என்னைக் குறை சொல்வது உங்கள் புத்திக் குறைவல்லவோ? புருஷமார் நினைத்தபடியே பெண்டுகளும் ஒரே பெட்டியிற் போடுவதென்றால் பெண்களுக்கு வாக்குரிமை தேவையில்லையே; இது எங்கள் பிறப்புரிமையல்லவோ? உமக்குப் பிரியமானவருக்கு நீர் சம்மதஞ் சொல்லலாம்; எனக்குப் பிரியமானவருக்கு நான் சம்மதஞ் சொல்லலாம்; இதுதான் இந்த டெமோக்ரசி அரசியல் முறையின் நியாயம்; அல்லாமலும் நான் செய்த வேலையை விட்டு நீங்கள் என்மேல் சந்தேகங் கொள்ள வேண்டியதல்லவா முறைமை: அடுத்தவீட்டுச் செங்கமலம் அப்பவீட்டுக் கருணைமலம், பக்கத்து வீட்டுப் பாறுவதி இவர்களெல்லாம் தாங்கள் சம்மதஞ் சொல்லுகிறவருக்குத் தான் தங்கள் புருஷாருஞ் சொல்லவேண்டுமென்று அவர்களைக் கட்டுப்படுத்தி அப்படியே செய்வித்திருக்கிறதாகவும் எனக்கு நேற்றுத் தோசக்காரத்தால் மீண்டு வரும் போதே சொன்னுர்கள்; இப்படி நடந்திருக்க, நான் உங்களை என் பிரியத்திற்குச் சம்மதஞ் சொல்லச் சொல்லிக் கட்டுப் படுத்தாமல் உங்கள் பிரியத்துக்குச் சம்மதஞ் சொல்லிப் போட்டுவரவிட்டது போதாதா! ஓ, ஓ, நன்மைக்குக் காலமில்லை; சரி, இனி மேலாகட்டும்" என்று சொல்லிச் சீறிச் சினந்து முகம் வாடிக் கண் கலங்கி முகத்தை மறுபுறமாக வைத்து ஒரு துளி கண்ணீரும் விட்டாள் அம்மாள்; இந்தப் பரிதாபத்தைப் பார்த்துக் கொண்டு இன்னமுஞ் சும்மா இருப்பாரா ஐயா? கண்டார், பதைபதைத்தார், துடிதுடித்தார்; தன் காதலியின் கண்ணீரைப் பற்றறத் துடைத்தார்; முத்தம் இட்டிருப்பார் மனையாட்டி உடன்பட்டிருந்தால்! 'கண்ணே' என அழுகின்றீர்; கவலைப்படுகின்றீர்; நீர் கண்ணீர் விட்டால், நான் இரத்தக் கண்ணீரன்றே விடவேண்டியவன்; சஞ்சலப் படவேண்டாம! நான் வேடிக்கையாக வல்லவா சொன்னேன்; உம்முடைய உள்ளக்கிடக்கை இப்படியென்று முந்தியே அறிந்திருந்தால், நான் சிவப்புக்குக் கேலி செய்து நானும் பச்சைப்பெட்டிக்குள் அல்லவா போட்டிருப்பேன" என்று சொல்லிப் பெரிதும் பச்சாத்தாபங் கொண்டு ஒற்றைக் காலில் நின்று பாதவித்தார் ஐயா. அவருடைய இரப்புரையைக் கேட்டமாதந்த சந்தோஷ பரவசமாகி அன்புமீதூர, புன்னகை செய்தாள் அம்மாள்; ஐயா ஆநந்தமடைந்தார்.

* • *

"மழைக்கால் இருட்டானுலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது" என்றொரு பழமொழி உண்டல்லவா? அதாவது மழைபோடும் காற்றேடும் இருட்டோடுங் கூடிய நேரத்திலே ஒரு மரத்தின கொம்பரில் இருந்து இன்னொரு மரக் கொம்பருக்குப் பாய்வது சங்கடமானுலும் குரங்கு மாத்திரம் இலக்குத் தவருமற் கெட்டித்தனமாகப் பாய்ந்து விடுமாம். யாழ்ப்பாணத்து மக்கள் எல்லாருமல்லர், பெரும்பாலார் எப்படிக் கை நீட்டினுலும், வாய்வழுக்கியிருந்தாலும், வாங்கிய உண்டகுடிக்க நியாயம் பற்றி, தகாதவர்களைத் தேர்ந்து எடுத்து போகவில்லையாம்; காரியத்திலே கண்ணுங் கருத்துமாகத்தான் இருந்தார்களாம். கல்வியறிவு திறமை வாக்குவன்மை என்னும் இவைகளில்லாமல் தனியே பணம் மாத்திரம் வெற்றியைத் தேடிவிடமாட்டாதென்பதை ஒருபிரிவுத்தேர்தலில்யாழ்ப்பாணத்தார்காட்டிவைத்துவிட்டார்களென்று முருகேசுதான் சொல்லுகிறார்.

# தேர் நற்காலத்தில் சாராயவெறி?

## போத்தல் அடியா? மோட்டார் விபத்தா? ஆஸ்பத்திரியில் இறந்த தட்டாதெருவாசி

## பொலிசார்க்குத் தகவல் கொடுக்காததேன்?

(நமது நிருபர்.)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தட்டாதெரு வாசியான விரகத்தி செல்லப்பா என்பவர் சென்றவார தம்தலையில் உண்டான காயத்தின் பயனாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இறந்தார். இக்காயம் ஓர் மோட்டார் விபத்தினால் ஏற்பட்டதென்று முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் விசாரணை புரிந்தளவில், யாழ்ப்பாணம் தெல்மாட்சிப்பகுதிச் சேர்ந்தவரான சண்முகம்—பொன்னுத்துரை என்பவர் ஓர்போத்தலால் அடித்ததனால் உண்டானகாயமென்று தெரியவந்தது.

செல்லப்பா தேர்தற்தினத்தன்று தட்டாதெருவில் மதுவெறியுடன் நின்றாரென்றும், அவர்க்கும் மதுவெறியுடன் நின்ற பொன்னுத்துரைக்குமிடையே ஏதோவாக்குவாதம் ஏற்பட, பொன்னுத்துரை கையில்இருந்த ஓர் போத்தலால் செல்லப்பாவிற்கடித்தார் என்று சொல்லப்படுகிறது.

அடிபெற்றதும் செல்லப்பா அறிவு மயங்கிக் கீழே விழ்ந்துவிட்டார், பின்னர் அவர் றிக்ஷாவென்றில் தமதுவீட்டிற்கு இட்டுச்செல்லப்பட்டார். ஆனால் இதனைப்பற்றிய தகவல் பொலிசார்க்கு அறிவிக்கப்படவில்லை.

சென்ற 28ம் தேதி செல்லப்பாவுக்கு சோய் அதிகரிக்க அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார். அவருக்கு முன்னர், ஓர் மோட்டார்வண்டியினால் ஒவிபத்து ஏற்பட்டது என்றும், அதனால் உண்டான காயத்திற்கே சிகிச்சை தேவையென்றும் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது,

அன்றிரவே செல்லப்பா ஆஸ்பத்திரியில் இறந்தார். பொலிசார் தொடர்ந்து புலன் விசாரித்தபோதே உண்மை வெளியாயிற்று. இக்கொலைக்குக் காரணரென்று சொல்லப்படும் பொன்னுத்துரைக்கு எதிராக விருந்தவிடப்பட்டிருக்கிறது.

## 50 ரூபா அபராதம்.

சென்ற செவ்வாய்க்கிழமை 3-3-36 யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சன்டிருப்பாயைச் சேர்ந்த பொன்னையா சண்முகநாதன் என்பவருக்கு அவ்வூர் ஐயாத்துரை செல்வரெத்தினம் என்பவர் பலாத்காரமாகக் காயப்படுத்திய குற்றச்சாட்டு வழக்கில் எதிரி தான் குற்றவாளியென ஒப்புக்கொண்டமையாலும் வழக்காளி தனது வழக்கை நெருக்கவில்லை என்று சொன்னபடியாலும் இருபகுதியினரும் உறவினரானபடியாலும் எதிரிக்கு 50 ரூபா அபராதம் நீதிபதி விதித்தார்.

## வைத்தியரும் அபினும்.

சென்ற 3-3-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் வண்ணார்பண்ணை பெருமாள் கோவிலடியில் வசிக்கும் இராமநாதன் சிவராசா வைத்தியர் கஞ்சாவும், அபினும் வைத்திருந்ததாக மதுப்பரிசோதகர் K. சண்முகமென்பவரால் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 1-ம் குற்றச் சாட்டுக்கு 50 ரூபாவும் 2-ம் குற்றச் சாட்டுக்கு 25 ரூபாவும்அபராதமாய் விதிக்கப்பட்டார்.

## ஆட்டுக்கள்வனுக்கு 3 மாதம்

யாழ்ப்பாணம் சோனக தெருவில் வசிக்கும் சுல்தான்காதர் என்பவனும் இன்னொருவனுமாகச் சேர்ந்து, அவ்வூர் மீராசாகிப் பிச்சைக்கனி என்பவருடைய ஆட்டைக் களவாண்டு, அதனைக் கொன்று மாமிசத்தை உபயோகப்படுத்திவிட்டு, அதன் தோலைத் தம் வளவுக்குட் புதைத்தனர் என்று குற்றம் சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் மீண்டும் விசாரணை செய்து, 1-ம் எதிரிக்கு 3 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2-ம் எதிரி விடுதலை செய்யப்பட்டான். 1-ம் எதிரி உயர்தர நீதிமன்றத்துக்கு மனுச் செய்கின்றன்.

## 20 ரூபா அபராதம்.

வயாவிளானைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பையா என்பவர் தமது வண்டியில் அதிக பாரம் ஏற்றினர் என்ற குற்றத்தின் பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் 20 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

## சோரமாகக்கள்ளுவிற்றமையின் பயன்.

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடியில் வசிக்கும் ஆள்வான் சின்னத்தம்பி என்பவன் சட்ட விரோதமாகக் கள்ளு விற்றன் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டி 15 ரூபா அபராதம் விதிக்கப்பட்டான்.

## ஒட்டு மடம் கத்திவெட்டு

வண்ணார்பண்ணை ஒட்டுமடத்தில் வசிக்கும் (1) பொன்னன் (2) நாகன் (3) ஆறுமுகத்தான் என்னும் பள்ள குலத்தினர் அராலியில் வசிக்கும் கதிரேசு என்பவர்க்கும் ஒட்டுமடம் இராசரத்தினம் என்பவர்க்கும் கத்தியால் வெட்டியும் பொல்லால் அடித்தும் காயம் விளைத்தனர் என்று சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டனர். அப்போது கதிரேசு என்பவர் பின்வருமாறு கூறினர்:-

"நான் சென்ற வியாழக்கிழமை பறைச்சேரி வெளிக் கமத்தில் செய்யாயிருக்குக் காவல் புரியச் சென்றபோது சாயுங்காலம், 1ம் 2ம் எதிரிகள் என்னை வழி மறித்தனர், பின்னர் 1ம் எதிரி ஓர் பொல்லால் அடிக்க 2ம்எதிரி கத்தியால் வெட்டினன். 3ம் எதிரி எனக்கு என்ன செய்தான் என்பது தெரியாது. அடியும் வெட்டும் பட்டபோது நான் கீழேவிழ்ந்து விட்டேன்."

இதன்பின் 1ம் 2ம் எதிரிகளைத் தனித்தனி 150 ரூபாப் பிணையில் விடுதலை செய்து நீதிபதி 20ம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டார். 3ம் எதிரி பிணையின்றி விடுதலை செய்யப்பட்டான்.

## ...வர் விஜயராகவாச்சாரியார்

...ஸர் டி. விஜயராகவச்சாரியா ...ரோமுக்குப் புறப்பட்டார். அங்கிருந்து அவர் இந்தியாவுக்குச் செல்லுவார்

ராய்ட்டர் நிருபரிடம் அவர் கூறியதாவது:—

பெர்லினைச் சுற்றியுள்ள பண்ணைகளை நான் பார்வையிட்டேன ...ண்ணை ஏற்பாடுகளும் நிர்வாகமும் ...றப்பாகவிருக்கின்றன. தொழிலா...ர் திருவாக முகமலர்ச்சியுடன் காண ...ர்த்தேன. அங்குள்ள சிறுவர் ...ளெல்லாம் மகிழ்ச்சியுடனிருக்கக் ...ணப்படுகின்றனர். ஜெர்மன் ...விவசாயிகளின் செழிப்பான நிலை ...ம எனக்குத் தெளிவாகப் புலப்பட்டது ஜெர்மனியின் பொருளா...ரப் பிரச்சினைகளை யுக்கேசித்த ...ண்ணைகள இவ்வளவு செழிப்பாக ...ருக்குமென நான் எதிர் பார்க்க...ல்லை. விவசாயப் பிரச்சினைகள் ...ஜர்மன் அரசினரால் தீர்க்கப்ப...டு ...றை குறிப்பிடத் தக்கதாயிருக்...றது. இந்தியாவில் நாங்கள் தீர்க்க வேண்டியவற்றைப் போலவே ...க்குள்ள பிரச்சினைகளுமிருக்கின்...ற.

...ஸர். டி. விஜயராகவாச்சாரியார் ...ன் மாதம் மறுபடியும் ஜெர்மனிக்கு வர உத்தேசித்திருக்கிறார்.

# யாழ்ப்பாணமும் கத்திக்குத்தும்.

## அதிகப்படுவதனால் வருத்தம்.

## நீதியரசரின் கண்டனம்.

வரணியைச் சேர்ந்த காம்பகுதிச்சி என்னுமிடத்தில் நிகழ்ந்த கொலை சம்பந்தமாக, யாழ்ப்பாணம் சுப்பிரிம்கோட்டில் நிகழ்ந்த விசாரணை விபரம் ஏற்கெனவே இப்பத்திரிகையில் வெளிவந்ததாகும். அவ்வழக்கில் 1-ம் 2-ம் எதிரிகள் குற்றவாளிகள் எனக்கண்டு தனித்தனி 10 வருஷச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். 3-ம் 4-ம் எதிரிகள் நிரபராதிகள் எனக் கண்டு விடுதலைசெய்யப்பட்டனர்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கையில் நீதியரசர் அவர்களை விழித்துப் பின்வருமாறு கூறினர்:-

"யாழ்ப்பாணத்தில் எந்தச் சிறு சண்டைக்கும கத்தியே இப்போது அநேகமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது உண்மையில் வருத்தத்தைக் கொடுக்கின்றது. அந்தோ! ஓர் இரும்பு ஆயுதத்தை ஓர் மனுஷனின் உடலிற்குள் ஈவிரக்கமின்றிச் செலுத்துவதென்றால் அதைப்போன்ற கொடுமை வேறென்ன வுண்டு?"

## பகிரங்கப்பகுதித் தலைவர்

இலங்கைப் பகிரங்கப் பகுதித் தலைவரான மிஸ்டர் W. J. கோன்லின் எனபவர் தம் பதனியினிலும் இன்பப்பாறி கேற்றைத்தினம் இங்கிலாந்திற்குப் பிராயாணமானர். இவர் இலங்கையில் அரசினரின் கீழ் 36 வருஷம் கடமை பார்த்தவராவர்.

## ஸ்ரீமதி கமலாநேரு

சென்ற திங்கட்கிழமை பின்னேரம் கொழும்பு ஜிந்துப்பிற்றி நாடக மண்டபத்தில் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. ஸ்ரீமதி கமலாநேருவின் மரணத்தை முன்னிட்டு ஓர் அநுதாபத் தீர்மானமும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## அட்டியலை அபகரித்தாரா?

மட்டுவில் வாசிகளாய 1 K சின்னத்தம்பி 2 A. பொன்னன் 3 K. கணபதி என்னும் மூவரும் சாசாலை சிவதரு கைம்பெண் முத்துப்பிள்ளை என்பவளின் அட்டியலை அறுத்துக் கொண்டு ஓடினர் என யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிகள் நிரபராதிகள் எனக் கண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்
இல. 8603 Testy. D. C. Jaffna.
காலஞ் சென்ற நீர்வேலி கனகசபாபதி வேலுப்பிள்ளையின் ஆதனகையிட்டு
எதிர்
நீர்வேலி வயித்திலிங்கம் மகன் கணபதிப்பிள்ளை
எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 8603 தந்தொகை இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1936-ம் ஆண்டு பங்குனி மீ 30உ திங்கட்கிழமை பிற்பகல் மூன்றரை மணி தொடக்கம் அந்தந்த காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

காணி விபரம்.

1 நீர்வேலி இறை "அதஸிபடியும் பங்காளருடை" பரப்பு லெ 58½ இதில் மேற்குப்பக்கமாக பரப்பு லெ 32 எல்லையிழக்கு வேலுப்பிள்ளை தம்பையாவும் இலையாபலம் சபாபதியும் பங்காளரும், வடக்கு சுருமலிங்கம் பெண் பொன்னம்மா, மேற்கு இக்காணியிற் மிகுதிப்பகுதி தெற்கு வேலுப்பிள்ளை செல்லையாவும், முருகேசு சின்னத்தம்பியும்

2 வது "விளாத்திபலை அல்லது உறுப்பைகுடை" பரப்பு லெ 10½ பங்காளரும் வடலிகளும், எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கு காசிநாதர் வேலுப்பிள்ளையும் பங்காளரும், மேற்கு சந்திராசா கைம்பெண் அமிர்தம்பிள்ளை.

Moses & Ponnappa
மோசேசும் பொன்னப்பாவும்
கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம் 1936-ம் ஆண்டு பங்குனி மீ 1 உ
Mis 288 5-3-36

# 1914ம் ஆண்டின் நிலை.

## மஞ்சூரிய எல்லைப்புறத்தில் யுத்த அணி! ருஷியா ஜப்பானிய போருக் காயத்தம்?

## அமெரிக்க ஆசிரியரின் அநுபவம்.

ஷங்காயில் இருந்து ஜெர்மன் தலைநகராய பெர்லினுக்கு மிஸ்டர் ஆர்தர் பேற் என்னும் பத்திரிகாசிரியர் வந்திருக்கிறார். மஞ்சுக்கோ எல்லைப்புறத்தில், ருஷிய அதிகாரிகளும், ஜப்பானிய அரசினரும செய்யும் பிரமாண்டமான யுத்த முஸ்திப்புக்களை அவர் நேரே தம கண்ணாரக் கண்டிருக்கிறார். அவர் கூறுவன வருமாறு:—

"ருஷிய, மஞ்சுக்கோ எல்லைப் புறங்களில் இருக்கும் நிலைமை அவதானிக்கு மளவில, 1914-ம ஆண்டின் ஆபத்தான நிலை ஞாபகத்திற்கு வருகின்றது. மஞ்சூரியாவில 60 ஆயுதப் புகைரதவண்டிகள் சதா ஆயுதங்களை எற்றிக் குவித்தவண்ணமாய் இருக்கின்றன. இன்னும் அப்புகைரதங்கள் மூலமாக ஜப்பானியப்படைகள் எல்லைப் புறத்திற்கு வந்துசேர்ந்தவண்ணமாயிருக்கிறார்கள்.

"ருஷிய எல்லைப் புறத்திலும், ருஷிய நிலை இப்படித்தான். ருஷ்யப்படைகள் யுத்தத்திற் காயத்தமாய் நிற்கின்றன.

"ஓமஸ்க் என்னும் மேட்டுப் பிரதேசத்தில் 3 மைல் நீளத்திற்கு ருஷிய ஆகாயப் போர்விமானங்கள யுத்தத்திற் காயத்தமாய் அணிவகுத்து நிற்கின்றன. ஆயுதத் தொழிற்சாலைகளில் இரவு பகல் என்ற பேதமின்றி எந்நேரமும ஆயுத உற்பத்திவேலை நடைபெற்று வருகின்றது"

## டாக்டர் ரவீந்தரநாதரின் சுற்றுப்பிரயாணம்.

டாக்டர் ரவீந்திரநாத தாகூர் சாந்திநிகேதன் சங்கீதக் கோஷ்டியுடன் கல்கத்தா, பாட்னு, அலகாபாத், டில்லி, ஆமதபாத், பம்பாய், நாகபுரி முதலியவிடங்களுக்குச் சென்று 'சித்ரா' என்ற நாடகத்தை நடிப்பார்கள். மார்ச்சுமாத ஆரம்பத்தில் சுற்றுப்பிரயாணம் ஆரம்பமாகும். அவர்கள் கல்கத்தாவுக்குத் திரும்ப சுமார் ஒருமாத காலமாகும். வங்காள அரசாங்கம் விஸ்வபாரதி கிராமப்புனருத்தாரண ஸ்தாபனத்துக்கு 1200 ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறது. டாக்டர் ரவீந்திரநாத தாகூர் இன்புளுயன்ஸா ஜுரத்தால் வருந்தியதால் அவர் சென்ற ஐந்து நாட்களாக பூரண ஒய்வுடனிருக்கிறர்.

## வீட்டுக்குக் கல் எறி.

சிறும்பியடியில் வசிக்கும் A. ஆறுமுகம் என்பவர் அவ்வூர் K. இளையதம்பி என்பவருடைய வீட்டுக்குக் கல்லால் எறிந்தார்என்று பொலிஸ்சார்ஜன்ற் செல்லையாவினுல் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார். நீதிபதி ஒதிரியை 100 ரூபா பிணையில் விடுத்து வழக்கைத் தவணையிட்டார்.

## அரசாங்கசபையின் முதற் கூட்டம்.

புதிய அரசாங்கசபையின் முதற் கூட்டம் மார்ச்மாதம் 17ம் தேதி வரையிற் கூடும் என கருதப்படுகின்றது.

## மந்திரசபை

இலங்கைப் போக்குவரத்துப் பகுதி மந்திரியான கௌரவ மிஸ்டர் H M. மக்கான் மரக்காயர் அவர்கள் மந்திரச் சபைத்தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். புதிய அரசாங்கசபை கூடிப் புதிய மந்திரசபை நியமிக்கப்படும் வரைக்கும் மிஸ்டர் E. C. வில்லியர்ஸ் என்னும் ஐரோப்பியர் போக்குவரத்துப் பகுதி மந்திரியாகக் கடமை பார்க்கும் படி தேசாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## கேம்பிரிட்ஜ் பரீட்சைப் பெறுபேறு.

சென்ற டிசம்பர் மாதம் நிகழ்ந்த கேம்பிரிட்ஜ் பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்பில் உள்ள சில கல்லூரிகளுக்குத் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பெறுபேறுகளின் முழு விவரமும் இன்னும் சில தினங்களில் இங்கு வந்து சேரும்.

## நீதிஸ்தலத்திற் பொலிஸ் பாதுகாப்பு

மாத்தளைப் பகுதித் தெரிவின் பின்னர் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு சம்பந்தமான விசாரணை சென்ற செவ்வாய்க்கிழமை மாத்தளைப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் நிகழ்ந்தது. நீதிஸ்தலத்தைச் சுற்றிலும ஆயுதபாணிகளான பொலிசார் காவல் புரிந்து நின்றனர்.

## சுழல்துப்பாக்கி வைத்திருந்த மாணவன்.

கண்டி நாட்டைச் சேர்ந்த யற்றிகமவில் வசிக்கும் 15 வயதுப் பையன் (1) அநுமதியின்றிச் சுழல் துப்பாக்கியொன்றை வைத்திருந்தான் என்றும் (2) அதனல் தன தாயையும் தமையனையும் சுட்டுக் காயப்படுத்தினன் என்றும் கண்டிப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டான. தன் தாயும் சகோதாரும் சண்டை செய்தார்கள் என்றும் அவர்களை விலக்குவதற்காகவே துப்பாக்கியினுல் ஆகாயத்தை நோக்கித் தான் சுட்டான் என்றும் அப்பையன் கூறினுன். நீதிபதி அவனை 1ம் குற்றச்சாட்டிற் குற்றவாளியெனக் கண்டு 15 கசையடித் தண்டனை விதித்து மற்றக் குற்றச்சாட்டினைப் பற்றி விசாரணை செய்தற்கு வழக்கைத் தவணையிட்டார்.

நாட்டுப் பொருள் அபிவிருத்தி.
[ வரையுளது ]
மூலதனம் ரூபா 30 000.
100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.
பிரதான நோக்கமாகிய நெற்செய்கை
சரைச்சி நீர்ப்பாசசுப்பகுதிகளில் நடந்துவருகிறது.
பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம்.
பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு 5 சதவீதம் சழிவு
நீர்ப்பாசன பகுதி வேளாண்மை நானேற வருவாய் எதிர்வருவது தெளிவாயிற்று.
அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!
யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்
" கந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. அம்மையா
" கல்லூரி ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.
ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்
ஆரம்ப கருத்தாக்கள்:—
Dr சி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R, R. கல்லையா J. P. யா. ந. ச. தலைவர்.
செ. முத்துவேலு J. P. கொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்,
K. தம்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை,
த. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
(H 192, 6-11-35 to 5-5-36 (வி) காரியதரிசி.

**பல் வைத்திய விளம்பரம்.**

யப்பானிய பல் வைத்தியரான எஸ் இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரியசேகு விலுள்ள திருச்செல்வம் பில்டிங்கில் நிகழும் மார்ச் மாசம் 7ந் திகதி தொடக்கம் 17 ந் திகதிவரையில் பல் வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பர்.

(Mis. 287. 5 & 9-3 36-)



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவ௵ மாசி௴ ௨௨ வியாழக்கிழமை.

## பிரதிகூலமடைந்த அபேட்சகர்கள்.

—:o:—

"பிரதானியும் கால வித்தியாசத்தினால் அப்பிரதானியாகின்றான்" என்று பஞ்சதந்திரம். சிலநாட்களின் முன் நடைபெற்றதாகிய அரசாங்கசபைப் பிரதிநிதித் தேர்தலில், சிரமப்பட்டுப் பொருள் செலவிட்டுத் தனித்தனி தங்களால் இயன்ற முயற்சி செய்தும் ஈற்றில் அபசெயமடைந்த அபேட்சகர்களையிட்டுச் சிந்திக்குமிடத்து, நாமும் அவர்கள் விஷயமாக அநுதாபப்படவேண்டியதே முறைமையாகும். இங்ஙனம் அபசெயமடைந்தமையினாலே அவ்வபேட்சகர்கள் கல்வியறிவில் திறமையில் வாக்கு வல்லபத்தில் அரசியல்ஞானத்தில் இன்னபிற கருமங்களில், செயமுற்றவர்களைக் காட்டிலும் எள்ளளவேனும் குறைந்தவர்களென்று எவரேனும் எண்ணுதல் தவறாகும். பிரதிகூலமடைந்த அபேட்சகருள் ஒருவர் இருவர், இப்பொழுது அநுகூலம் பெற்றிருக்கும் பிரதிநிதிகளைக் காட்டிலும் சிறந்தவர்களென்று சொல்லினும் பிழையாகாது. இந்தத் தேர்தல் விஷயத்திலே வெற்றியும் தோல்வியும் ஒருவருடைய திறமையை மாத்திரம் பொறுத்தனவல்ல வென்பதை அநுபவத்திற் கண்டுள்ளோம். இந்த விஷயத்திலே செல்வஞ் செல்வாக்கு அதிகாரம் டலர் சினேகம் முதலிய இவைகளும் காரணங்களாக வருகின்றன. வெற்றியும் தோல்வியும் ஒருவன் டங்கல்ல. வென்றார்தோற்பதும் தோல்வியுற்றார் வெல்வதும் சகசந்தானே. இவைகளெல்லாம் அவரவர் காலத்தைப் பொறுத்தனவாகும். நமது யாழ்ப்பாணப் பெரும்பிரிவில் மாத்திரமல்ல, இத்தேர்தற் கருமத்தில் இலங்கையிலுள்ள ஏனைய பாகங்களிலும் என்ன நடந்ததென்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

சென்ற அரசாங்கசபையில் ஹொறணைப்பகுதிச் சபைப்பிரதிநிதியாகவிருந்து பெரிதும் உழைத்தவராகிய மிஸ்ரர் E. W. பெரிரு, முந்தி மந்திரியாகவிருந்த கப்பலைப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் T B பனபொக்கே, அப்பொழுது அரசாங்கசபைத் தலைவராய் இருந்த மிஸ்ரர் F. A. ஒபயசேகர ஆகிய இவர்கள் இந்த முறை நடைபெற்ற தேர்தலில் தோல்வியுறவில்லையா? இவர்களெல்லாரும் தங்கள் அறிவாற்றலில் இப்பொழுது குறைந்துவிட்டனரென்று, இவர்கட்கு நேர்ந்த அபசெயத்தைக் கொண்டு சொல்லலாகுமா? ஒருபோதுஞ் சொல்ல முடியாது. அல்லாமலும் பிரதிகூலமே அநுகூலமென்னுங் கோபுரத்தையடைதற்கு ஏற்றதான படித்துறை என்று சொல்லப்படும். ஸ்கொத்லந்துத் தேசாபிமானியாகிய றபேர்ட் புறூஸ் என்பவர் சுயாதீனத்தை விரும்பிப் பிரதானியருடன் சமர் செய்யப் புகுந்து, ஒருமுறை இருமுறையல்ல, ஆறுமுறை தோல்வியுற்று, ஆறும் முறை பகைவருக்குப் பயந்து ஒளித்தோடி ஒதுக்கிடந்தேடி ஒரு குடியானவனுடைய குடிசையிற் படுத்திருந்தாராம். படுத்தபடியே அவர் அக்குடிசையின் மேற்புறத்தைப் பார்த்தபோது, ஒரு சிலந்திபானது வலை கட்டும்படி தன் வாயிலுள்ள நூலை ஒரு

விட்டங்கட்கிடையே மாட்டும்படி பாய்ந்து ஆறுதாமும் அநுகூலமடைதலின்றி ஏழாவது முறை அநுகூலம் உற்றதை அவதானித்தாராம்; உடனே அவருடைய உள்ளத்திற் புத்தூக்கம் உதிக்கத் தம் படுக்கையை விட்டெழுந்து முயற்சி செய்து பரிசனரைச் சேர்த்துப் பகைவருடன் போர் செய்து அந்த ஏழாமுறையில் வெற்றியடைந்தாரென்று சரித்திர நூலிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால், நமது அபேட்சகர்கள் தமக்கு இப்பொழுதுநேர்ந்த தோல்வியை உத்தேசித்து மனமுடைந்து ஊக்கங் குன்றிச் சோர்வுடனிருக்கவொண்ணாது. வெற்றியடைந்தோர் அரசாங்கசபையின்கண் தேசனங்களின் நன்மையையிட்டு உழைக்க, இவர்கள் அச்சபையின் புறத்தே, அதாவது ஊரிலே நின்று சனங்களின் ஈடேற்றத்தை உத்தேசித்து அவர்களைக் காட்டிலும் அதிகமாக உழைத்தல் முடியுமல்லவா? இங்ஙனமெல்லாம் இருத்தலினால், பிரதிகூலமுற்ற இவர்களும் அநுகூலமுற்ற பிரதிநிதிகளுடன் மாறுபடுதலின்றி அவர்கள் அகமும் இவர்கள் புறமுமாக நின்று சலிப்பின்றிச் சனங்கள் நலத்தையிட்டு உழைத்தல் வேண்டும். இப்படிச் செய்வதினால் அடுத்த தேர்தலில் ஊரவர்களே மார்ச்சார சம்பந்தமாக, அதாவது தாய்ப்பூனை குட்டியைத் தானாகவே வந்து தூக்கிக்கொண்டு போவது போல, தாங்களாகவே இவர்களை அதிகசிரமம் செலவுமுதலியனவின்றி அரசாங்க சபையிற் கொண்டுபோய்த் தங்கட்குப் பிரதிநிதிகளாகச் சேர்த்துவிடுவார்கள்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

என்னும் திருவள்ளுவர் வாக்கை இவர்களும் அவர்களும் மற்றை எவர்களும் மறந்து விடவொண்ணாது

## மீண்டும் சமாதானப் பேச்சு!

இற்றலிய — அபிஸீனிய யுத்தம் ஆரம்பமாகி இன்றுடன் 5 மாதங்களுக்கு மேலாகின்றன. இந்த யுத்தத்திற்கு ஜவாப்தாரி இற்றலியேயன்றி அபிஸீனியாவல்ல என்று அகில உலகமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே, நயத்தினாலோ பயத்தினாலோ இற்றலியை அடக்க வேண்டியது சர்வதேச சங்கத்தின் கடமையாகின்றது. ஆனால் இக்கடமையை இச்சங்கம் செய்யத் தயங்குவதும் ஏனோ?

இற்றலியிடம் போதிய ஆயுத பலம் உண்டு என்பது உண்மை; ஆனால் பெற்றோல் எண்ணெய் இனறேல் அவ் வாயுதபலம் ஒன்றும் செய்யமுடியாது; இந்த உண்மையை அறிந்த பின்னரும் சர்வதேச சங்கம எண்ணெய் நிர்ப்பந்தத்தை இற்றலிக்கு விரோதமாக விதிப்பதற்கு வழவழா நியாயம் கூறிக் கடத்திக் கொண்டு வருகின்றது. எண்ணெய் நிர்ப்பந்தம் ஒன்றே இற்றலியைப் பணியவைக்கும்.

நிலைமை இப்படியிருக்கையில், மீண்டும் சமாதானப்பேச்சு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பழைய குருடி கதவைத் திறவடி என்றபடி இந்தப் பேச்சை ஆரம்பித்திருப்பவர்கள் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியான மிஸ்ரர் அந்தோனி ஈடனும், பிரான்சிய மந்திரியான பிளாஸ்டின் என்பவருமே! சேர் சாமுயல்ஹோரும் பிரான்சியமந்திரி லவாலும் ஆரம்பித்த சமரசப் பேச்சைக் கண்டித்து, இதோ இற்றலியை வெட்டி வீழ்த்திவிடுகிறோம் என்று மீசை முறுக்கி, மார்புதட்டி எழுந்து முழக்கஞ்செய்த மிஸ்ரர் ஈடன் இன்று ஆட்டுக்குட்டிபோற் பதுங்கிச் சமரசப் பல்லவிபாடுதல் பிரிட்டிஷ் இராஜதந்திரிகளின் உண்மைத் தன்மையைக் காட்டுகின்றதன்றி வேறு என்ன?

இங்கிலாந்து, பிரான்ஸ் என்னும் ஏகாதிபத்திய வாஞ்சை பிடித்த வல்லரசுகளைக் கொண்ட சர்வதேச சங்கத்தினால் கறுப்பு நாடுகளுக்கு ஒருவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. கொண்டானும் கொடுத்தானும் ஒன்று என்றாற்போல இவ் வைரோப்பிய வல்லரசுகள் இற்றலி அபிஸீனியாவை ஜெயித்து எப்பயிடும்வரை மதின்மேற் பூனையெனப் பார்த்துக்கொண்டு, பின் தமக்கும் பங்குகேட்கும் என்பது நிச்சயமபோலத் தெரிகிறது.

# கண்ணோட்டம்.

### மலையேறிவிட்டது

ஹற்றன் (தொப்பிதோட்ட) பகுதித் தேர்தலில் இருந்து ஐரோப்பிய வெள்ளைத் துரைமார் படிக்க வேண்டிய பாடம் ஒன்றிருக்கிறது. அப்பாடத்தை அவர்கள் இப்போது படித்திருப்பார்கள் என்றே நம்புகின்றோம். இப்பகுதிக்குப் போட்டியிட்டவர்கள் ஸ்ரீ க. நடேசஐயர் என்பவரும், ஸ்ரீமதி லக்ஷ்மி இராஜரத்தினம என்பவருமேயாவர். இப்பகுதியின் வாக்காளர்களில் மிகப் பெருந் தொகையினர், ஐரோப்பியரால் வைத்து நடாத்தப்படும் தோட்டத் தொழிலாளிகளேயாவர். தேர்தலில் ஐரோப்பியத் தோட்ட முதலாளிமார் ஸ்ரீமதி லக்ஷ்மிக்கே தமது ஆதரவைப் பூரணமாக அளித்தனர். அரசியல் விஷயத்தில் அபிப்பிராயபேதம கொள்வது ஜனநாயக ஆட்சிமுறை மேலோங்குவதற்கு நல்லதாகும். எனவே, ஐரோப்பிய முதலாளிகள் ஸ்ரீமதி லக்ஷ்மிக்கு ஆதரவளித்ததையிட்டு நாம அவர்களைக் குறைகூற முன்வரவில்லை. ஆனால் அவர்கள் எதிர்பால் நடந்துகொண்ட விதத்தையே பலமாகக் கண்டிக்கின்றோம். இந்த வெள்ளைக்காரர் தமக்குரிய தோட்டங்களிலே ஸ்ரீமாந் நடேசஐயரையோ, அல்லது அவரின் ஆட்களையோ, தேர்தற் பிரசாரம் செய்ய அநுமதிக்க மறுத்தார்கள். சில இடங்களில் அவர் தங்க இடந்தானும் கொடுத்தார்களல்லர். தேர்தற்தினத்தில், செம்மறியாடுகளைக் கலைத்துக்கொண்டு செல்வதுபோல தம் தோட்டக் கூலிச் சனங்களைத் தேர்தல் இடத்திற்கு அழைத்துச் சென்று, ஸ்ரீமதி லக்ஷ்மிக்கே ஆதரவுகொடுக்கும்படி வற்புறுத்தினர், பயமுறுத்தினர்: ஈற்றில் நடந்தது என்ன? ஸ்ரீமான் நடேசஐயர்க்கு 16364 வாக்குச் சம்மதங்களும், தோட்ட முதலாளிமார் ஆதரித்த ஸ்ரீமதி லக்ஷ்மிக்கு 3635 வாக்குச் சம்மதங்களுமே கிடைத்தன. பலாத்காரத்தினால், பயமுறுத்தலினால் அரசியலில் அதிகாரம் பெறலாம் என்னும் எண்ணத்தை இனி தோட்ட முதலாளிமாரும் ஏனையோரும் இன்றோடு விட்டுவிடுதல் நலம்பயக்கும்.

### கொடிய யுத்தம்?

மஞ்சுகோ, ருஷிய எல்லைப் புறங்களில நடக்கும் யுத்த ஆயத்தங்களைப்பற்றி ஓர் அமெரிக்க ஆசிரியர் எழுதுவதை இறைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் குறிப்பிட்டிருக்கிறோம். இப்போது பல வாண்டுகாலமாக ருஷியா, ஜப்பான் என்னும் இருநாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்பு மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருந்து வருகின்றது. இப்போதுள்ள நிலைமையில் எப்போது இவ்விருநாடுகளுக்குமிடையே யுத்தம் மூளுமெனறு நாம் சொல்ல முடியாமல் இருக்கிறோம். இருநாடுகளும் யுத்த வெறிபூண்டிருக்கின்றன வென்பது மாத்திரம் நிச்சயம். ஒன்றையொன்று கொன்று வயபமிடச் சமையம பார்த்துக்கொண்டு நிற்கின்றன. இப்படியான ஓர் யுத்தம இந்த இருநாடுகளுக்குமிடையே மூளுமானால், அது எத்தகைய கொடியதாயிருக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. பீரங்கி, கொடிய நச்சுக்காற்று, விஷப்படலம், என்பன தம் தர்பாரைச் சம்பூரணமாகச் செலுத்தும். அந்தோ! இந்த மிருகசக்தி அழிந்து ஒழியுங்காள்தான் எக்காலமோ!

### இந்தியப் பெரியார்க்கு உருவச்சிலை

காலஞ்சென்ற வங்கநாட்டுப் பெரியார் சேர் சுரேந்திர நாத் பனார்ஜி உருவச்சிலை நிதியின் காரியதரிசியான ஸ்ரீஜுத் T. C. கோஷ் அவ் உருவச்சிலை அமைப்பது சம்பந்தமாக அவ் நிதியை செய்து முடிப்பதற்கு 20000 ரூபா செலவாகும் என்று ஓர் விண்ணப்பம் அனுப்பியிருக்கின்றார்,

### அபிஷேகம் இடம்பெற்றது

ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச்சங்கம் நல்லூர்.

வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈயும் பரம கருணாநிதியாகிய ஸ்ரீ கணேசப்பெருமான கோயில் கொண்டெழுந்தருளிய நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலின் வடக்கு வீதியில் மேற்படி பெருமானின் திருவருளை முன்னிட்டு அவ் வூர் அபிமானிகளின் முயற்சியால் அமைத்த சங்கத்திற்கென ஓர் நிலம் வாங்கப்பெற்று அந்நிலத்திலே நிகழும் மாசிமாதம் 21 - தேதி (4-3-36) புதன்கிழமை இரவு 8 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே யாழ்ப்பாணம்சிவகுருநாத குருபீடத்து உயர் திரு மகாதேவ சுவாமி அவர்களால் பல அன்பர்கள் சமுகத்தில் அபிஷேகம் இடம்பெற்றது.

இத்திருப்பணி இனிது நிறைவெய்தற்கு எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

### அமெரிக்க நாகரீகம்.

கானல் லின்ட்பர்க அமெரிக்காவிலிருந்து பிரிட்டனில் குடியேறிவிட்டது குழந்தை திருடர்களுக்குப் பயந்துமட்டுமல்ல, அவர் தம்மினும் அவ்விஷயம் அமெரிக்க பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில் பிரசுரமாகிவிடும். அவரது படுக்கை அறையிலே ஓர் மைக்கிரோப் போனை ரகசியமாகவைத்து அவர் தம மனைவியுடன் அந்தரங்கமாகப் பேசுவதையும் ஆகாச வசனி மூலம் அமெரிக்காவெங்கும் பரப்பிவிட்டார்கள். சாதாரண வாழ்க்கை நடத்துவதுப் அசாத்தியமாகிவிட்டதால் கானல் லிண்ட்பர்க் பிரிட்டனுக்கு வந்துவிட்டார்.

### ஜப்பான் கலகம்.

ஜப்பான் கலகம் சீனாவில் விசேஷக் கவலையை உண்டு பண்ணியிருக்கிறது. சீனா மங்கோலியா சோவியத் முதலியவற்றிற்கெதிராக ஜப்பானிய இராணுவத்தார் அதிக தீவிரமான நடவடிக்கையெடுத்துக்கொள்ளக் கூடுமென்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது. ஜப்பானியர் வெளி மங்கோலியாவில் உடனே புகுவார்களென்றும் சிலர் எதிர் பார்க்கின்றனர்.

ஜப்பானிய இராணுவத்தார் கையில் அதிகாரம் நீடித்திருக்குமாயின் கீழ்க்கோடி நாடுகளில அவர்களது அதிக்கிரமங்கள் அதிகரிக்குமென்றும் அல்லது உள்நாட்டிலேயே கலகம் தோற்றமெனவும் ருஷியர் கருதுகின்றனர்.

ஜெர்மன் அபிப்பிராயம்.

ஜப்பான் சம்பவங்கள் ஜெர்மனியில் விசேஷ பரபரப்பை உண்டுபண்ணியிருக்கின்றன. பத்திரிகைகள் அச்செய்திகளைப் பிரபலமாகப் பிரசுரித்துள்ளன,

சோவியத் ருஷியாவின் ஆயுதஸ்வீகாரணம் ஜப்பான் கலகத்திற்குக் காரணமாயிருந்திருக்கக் கூடுமென்று ஒரு பத்திரிகை கருதுகிறது. மாஸ்கோவுக்கு எதிரான சாம்ராஜ்ய வாதமும் உள்நாட்டு நிலைமையும் கலகத்தை உண்டுபண்ணியிருக்கலாமென்று மற்றொரு பத்திரிகை கூறுகிறது.

இராணுவத்திற்கும் அரசியல் வாதிகளுக்குமுள்ள அபிப்பிராய பேதம் கலகத்தில் பரிணமித்ததென்று இன்னொரு பத்திரிகை சொல்லுகிறது.

சர்வாதிகாரி தோன்றுவாரா?

டோகியோ சம்பவங்கள் காரணமாக பாஸிஸ்டு சர்வாதிகாரி முறை ஜப்பானில் தோன்றுமோவென ஒரு சாரார் அஞ்சுகின்றனர். மந்திரி சபையிலிருந்த மிதவாதிகளை நீக்கிவிட்டதால் கலகக்காரர்களின் நோக்கம ஒருவாறு நிறைவேறிவிட்டதென்று சொல்லப்படுகிறது.

# பலசரக்கு.

### "சஞ்சயன்" சாற்றுவது.

வடபகுதியில் நிகழ்ந்த 3 பொதுத் தேர்தல்களின் பொருட்டும 20000 போத்தல் சாராயம் செலவழிக்கப்பட்டிருக்கிறதாம் என ஈழகேசரி கூறுகிறது அம்மம்ம! 50000 ரூபா அநியாயமாயிற்று!

X X X

இம் மூன்று ஸ்தானங்களுக்குமாக நிகழ்ந்த தேர்தல்களில் குறைந்த பட்சம் எல்லாமாக 2 லட்சம ரூபா செலவழிக்கப்பட்டிருக்கும் என்றும், இந்த 2 லட்சம் ரூபாவிற் பெரும பான்மையான தொகை பெற்றோல் எண்ணெயிலும், சாராயத்திலும் செலவழிக்கப்பட்டிருக்கும் என்றும், தேர்தற் காலத்தில் லஞ்சமாக ஏதும் பணம் பெற்றவர் இப்போது அதில் 5 ரூபாவேனும் வைத்திருக்கார் என்றும ஸ்ரீமாந் மகாதேவா அன்று ஓர் கூட்டத்திற் பேசினார். இந்த 2 லட்சம் ரூபாவையும் நாட்டின நலத்திற்காக, தொழில் விருத்திக்காகச் செலவழித்திருந்தால் நலம் பயக்கும் என்று ஸ்ரீ மகாதேவா கூறினார். இந்த ஞானத்தை ஸ்ரீமான் மகாதேவாவும், வெற்றி பெற்றிருக்கும் ஏனைய பிரதிநிதிகளும ஏற்கெனவே போதித்திருந்தால் நலம் கிடைத்திருக்கும.

X X X

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதித் தேர்தற்றினத்தன்று பட்டப் பகலில், தட்டாதெருவில் ஒருவர் இன்னொருவர்க்குப் போத்தலால் (?) அடித்தாராம். அடிபட்டவர் மயங்கிக் கீழ் விழ்ந்தாராம். அன்று முழுவதும தெருத்தெருவாய்த் திரிந்த பொலிஸ் புலிகட்கு இச்சம்பவம் தெரியாமல் விட்டதும் ஏனோ?

X X X

இலங்கை அரசாங்கசபையில், முதன்முதலாகத் தந்தையும் மகனும் ஸ்தானங்கள் வகிக்கப்போகின்றனர். விவசாயப்பகுதி மந்திரியான மிஸ்ரர் D. S. சேனநாயக்காவின் மகன் டட்லி சேனநாயக்கா டெடிகமப் பகுதித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று இப்போது அறிடக் கிடக்கின்றது.

### யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு.

மன்னாரில் வசிக்கும் பிறசார்கொடுதோர் தம்பியப்பு என்பவர் அவ் வூர் முத்தன் என்பவனைக் கொலை செய்தான் என்ற வழக்கில் எதிரி 6 வருஷச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்,

### எலும்புத்துண்டினால் சச்சரவு.

நேற்றைறபதினம், காலி மார்க்கட்டில் உள்ள இறைச்சிக்கடை வழியாக ஓர் பௌத்த சந்நியாசி செல்ல நேர்ந்தது. அவர்மீது ஒரு எலும்புத்துண்டுபட்டது. அது வேண்டுமென்று எறியப்பட்டதோ, அன்றேல் தற்செயலாகப்பட்டதோ தெரியவில்லை. உடனே அங்குநின்ற ஜனங்கள் மார்க்கட்டில் இருந்த இறைச்சிக்கடைகள் யாவற்றையும் நாசம் செய்யத் தொடங்கினர். இதற்கிடையிற் பொலிசாரும் ஏனைய பௌத்த பிரமுகரும் வந்துகலகம்வராவிடாதபடி தடுத்தனர். இது சம்பந்தமாகச் சிலர் சிறையாக்கப்பட்டிருக்கின்றனர். இறைச்சிக் கடைக்காரர் பயமிகுதியால் இன்னும் தங்கள் கடைகளைத் திறக்கவில்லையென ஓர் தந்திச் செய்தி கூறுகிறது.

களவினாலாகியவாக்கமளவிறந்
தாவது போலக் கெடும்.

# மீண்டும் சமாதானப் பேச்சு.

## பிரான்சிய பிரிட்டிஷ் மந்திரிகள் முயற்சி சக்கரவர்த்தி விட்டுக் கொடுப்பாரா?

### லண்டனுக்குவந்த முக்கிய கடிதம்.

### சக்ரவர்த்தினிக்கு இராஜ்ய பாரம்.

அபிசீனிய இளவரசர் ஜெனிவாவிலேயே, தங்கியிருப்பதால் சக்கரவர்த்தினியே, இராஜ்யபாரத்தை ஏற்று நடத்துவார்.

### தற்கொலை செய்யவில்லை.

தெம்பியன் யுத்தத்தில் தோல்வியுற்றமையினால் அவமானத்தைச் சகிக்கமுடியாது ருஸ்கஸா என்னும் சேனாதிபதி தற்கொலை செய்திறந்தார் என்று இற்றலியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

### சமாதானப் பேச்சு.

இற்றலிக்கு விரோதமாக எண்ணெய் நிர்ப்பந்தம் விதிப்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக சர்வதேச சங்கத்தப் பதினெண்மர் சபை சென்ற ஞாயிற்றுக்கிழமை கூடியது. ஆனால் அச்சபை எண்ணெய் நிர்ப்பந்தம் விதிப்பதைப்பற்றி ஆலோசிக்காது, இற்றலிக்கும் அபிசீனியவுக்குமிடையே சமாதானம் உண்டாக்க இன்னோர் கடைசிப் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தது. இத்தீர்மானத்தைப் பிரேரித்தவர் பிரான்சிய அந்நியநாட்டு மந்திரியான பிளான்டின் என்பவரே! மிஸ்ரர் அந்தோனிசடனும் இப்பிரேரணையை மனப்பூர்வமாக ஆதரித்தார்.

### பிரிட்டிஷ் அரசர் சமாதானப்?

சென்ற 2ம் தேதியன்று அபிசீனியச் சக்கரவர்த்தியிடம் இருந்து முக்கியமான ஓர் கடிதம் லண்டனுக்கு வந்தது. அது உடனே மிஸ்ரர் அந்தோனிசடனிடம் சமர்ப்பிக்கப்பட்டது: அபிசீனியாவில் இற்றலியர் இதுகாறும் கைப்பற்றிய இடங்களை இற்றலியரே இனியும் வைத்துக்கொள்ள அபிசீனியச் சக்கரவர்த்தி இணங்கியிருக்கின்றார் என்னும், சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு எட்டாம் எட்வர்டு மன்னர் முயற்சிக்கவேண்டும் என்றும் அக்கடிதத்திற் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்று மிஸ்டர் உவாட் பிரைஸ் என்பவர் லண்டன் "டெய்லி மெயில்" பத்திரிகையில் எழுதுகிறார்.

### இத்தாலியின் படைப்பலம்.

எதியோப்பிய - இத்தாலிய யுத்தம் ஆரம்பித்த சமயத்தில், இத்தாலி எதியோப்பியாவில் எவ்வளவு படை பலத்துடன் இருந்ததென்பதும், அது கொண்டு போன சாமான்கள் எவ்வளவென்பதும், சூயெஸ் கால்வாய் கம்பெனி வெளியிட்டிருக்கும் விவரத்திலிருந்து அறியக்கிடக்கின்றன:-

1935 ஜூன் 25-ந் தேதியிலிருந்து டிசம்பர் 25-ந் தேதிவரை சூயஸ் கால்வாய் வழியே 445 இத்தாலியச் சாமான்கள் ஏற்றிச்செல்லும் கப்பல்கள் சென்றிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| ஆட்கள் (வீரர்களும் வேலைக்காரர்களும்) | ,, | 2,46,361 |
| கழுதைகள் | | 24,287 |
| ஒட்டகங்கள் | | 770 |
| லாரிகள் | | 1481 |
| ஆகாயவிமானங்கள் | | 268 |
| இறைச்சி | டன்கள் | 19,000 |
| கந்தகமண் | ,, | 4,491 |
| சிமிட்டி | ,, | 11,775 |
| வைக்கோல் | ,, | 44,593 |
| மரம் | ,, | 33,490 |
| நிலக்கரி | ,, | 39,655 |
| யுத்த மருந்துகள் | ,, | 40,343 |
| குடி தண்ணீர் | ,, | 9,000 |
| மெஷீன் எண்ணெய் | ,, | 8,298 |
| எண்ணெய் | ,, | 27,820 |
| பெட்ரோல் | ,, | 9564 |
| ஆயுதங்கள் | ,, | 2,50,757 |
| வெடிகுண்டுகள் | ,, | 7,483 |
| வெடிமருந்துகள் | ,, | 29,009 |
| தீப்பெட்டிகள் | ,, | 1669 |
| மதுபானங்கள் | ,, | 13,309 |

அதே காலத்திற்றான் 338 கப்பல்கள் எதியோப்பியாவிலிருந்து திரும்பி ரோம் சென்றிருக்கின்றன. அக் கப்பல்களில் 35,697 பேர் நோய் பிடித்தவர்களாகவும் காயமடைந்தவர்களாகவும், வேலைக்கால ஒப்பந்தம் முடிந்தவர்களாகவும் இருந்தவர்கள் ரோமுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர்.

### கொழும்பு விவேகானந்த சபை

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளது எழுபத்து நான்காம் ஜெனனத் திருநாள் ஞாபகவிழாவானது நிகழும் யுவ வருஷ மாசி மீ 25 உ (8-3-36) ஞாயிறுக்கிழமை சபை மண்டபத்தில் நடைபெறும் என அறிகிறோம்.

### மாசி மகம்

மாசி மாசத்து மக நட்சத்திர புண்ணிய தினம வருகிற சனிக்கிழமை (7-3-36) யாகும். அன்று பூரணை விரத தினமுமாம். மக புண்ணிய காலத்திற் சைவ நன்மக்களாயுள்ளோர் புண்ணிய தீர்த்த ஸ்நானம் ஆலய தரிசனம் தானதருமம் முதலியன செய்தல் உத்தமமாகும். மக தினத்தன்று கும்பகோணம் மாமாங்க தீர்த்த ஸ்நானமும் திருக்குடந்தை ஈசுவரர் தரிசனமும் உத்தமோத்தமமாகுமெனச் சைவ நூல்கள் கூறும்.

### ஜெர்மனியின் ஆகாயப்படை

ஜெர்மனி தனது ஆகாயப்படையை அதிகரித்து அசனை மிகவும் பலமுள்ளதாக்கிக் கொண்டுவருகிறதென்பதே இங்கிலாந்தின் ஆகாயப் படை மந்திரியாயிருக்க லண்டன்டரிப் பிரபுவின் அபிப்பிராயமாகும். லண்டன்டரிப் பிரபு இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் ஜெர்மனிக்கு விஜயம் செய்து, ஹிட்லர் முதலாம் ஜர்மன் தலைவர்களைக்கண்டு சம்பாஷித்தவராவர்.

### அமெரிக்காவில் அதிகச் சம்பளம் வாங்குபவர்.

சமீபத்தில் அமெரிக்கப் பொக்கிஷ இலாக்கா காங்கிரஸிற்கு, அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்களின் பட்டியல் ஒன்று தயாரித்துச் சமர்ப்பித்திருக்கின்றது.

இதில் முதலாவது பெயர் சினிமா நடிகையான மே வெஸ்ட். அவளுக்கு 1934 ம் பாரமவுண்ட் பிலிம்கம்பெனி 68000 பவுண் கொடுத்தது.

ஸ்திரீகளின் பத்திரிகையை நடத்திய ஸ்ரீமதி ரூஸவெல்டிற்கு அவ்வருஷம் 32,000 பவுண் கொடுக்கப்பட்டன.

அதிலிருக்கும் சிலருடைய முழு வருமானமும் கொடுக்கப்படவில்லை. அவர்களில் சிலர் பின்வருமாறு:-

அமெரிக்க டெலிபோன்-தந்தி கம்பெனித் தலைவர் கிறீ. வால்டர்கிப் போர்ட்டுக்கு 42,000 பவுண்.

அமெரிக்கப் புகையிலைக்கம்பெனித் தலைவர் கிறீ. ஜார்ஜ் ஹில் 37,000 பவுண்.

சேஸ் நேஷனல் பாங்கித் தலைவர் வின்தார்ப் ஆல்டிரிச் 35,000 பவுண்

சினிமா ஹாஸ்யநடிகன் டபிள்யு. ஸி. பீல்ட்ஸ், பாரமவுண்ட் கம்பனியிலிருந்து 29,000 பவுண்.

சினிமா நடிகை மார்லீன் டீட்ரிச் பாரமவுண்டிலிருந்து 29,000 பவுண்.

கொலம்பியா பிராட்காஸ்டிங் கம்பனித் தலைவர் மிஸ்ரர் வில்லியம் பாலி 28,000 பவுண்.

ஹாஸ்ய சினிமா நடிகன் சார்லி சப்ளின் 28,000 பவுண்.

மிக்கி மவுஸ் என்ற எலும்பைச் சிருஷ்டித்த வால்ட் டிஸ்னி 16,000 பவுண்.

நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகையின் வாஷிங்டன் நிருபருக்கு 36,000 பவுண்

### வெற்றிபெற்றோர்.

ஸ்ரீ நடேசஐயர்க்கு வெற்றி.

டக்ரர் விக்கிரமசிங்கி தோற்றார்.

அரசாங்கசபை அபேட்சகர்களும் வெற்றிபெற்றோரும் பின்வருவோராவர்:-

(முற்றொடர்.)

**வெலிகம.**

மிஸ்ரர் D. வன்னிகசேகா (வெற்றி)
மிஸ்ரர் A. P. D. அமரசூரிய

**மட்டக்களப்பு தெற்கு.**

ஸ்ரீ S. O. கனகரத்தினம் (வெற்றி)
மிஸ்ரர் K. M. அப்துல் மஜீட்
மிஸ்ரர் M. A. L. காரியப்பர்

**புத்தளம்.**

மிஸ்ரர் J. H. இலங்கைதிலகை (வெற்றி)
சேர் ஹென்றி டி மெல்
சேர் J. W. செனநாயக

**டெடிகம.**

* மிஸ்ரர் D. S. சேனநாயக (வெற்றி)
மிஸ்ரர் N. H. கீர்த்திரத்னி
மிஸ்ரர் நிச்சேர்ட் நுகவெல
மிஸ்ரர் P. B. டெடிகம
முதலியார் J. W. உடலகம

[ * குறித்த சேனநாயக என்பவர் விவசாய பகுதி மந்திரியான மிஸ்ரர் சேனநாயகவின் புதல்வராவர்; இவர் இருவரும் இந்த அரசாங்கசபையில் ஏக காலத்திலே பிரதிநிதிகளாக இருப்பர்; இலங்கை அரசியற்சபையில் தகப்பனும் மகனும் பிரதிநிதிகளாய் உடனிருத்தல் முதன் முதல் இப்பொழுது தானும் ]

**தொப்பி தோட்டம்.**

ஸ்ரீ K. நடேசஐயர் (வெற்றி)
ஸ்ரீமத் C. S. இராசரெத்தினம்

**மொறு வாக்க.**

மிஸ்ரர் R. C. கன்னங்காரா (வெற்றி)
டக்டர். S. A. விக்கிரமசிங்கி

**கம்பகா.**

மிஸ்ரர் D. P. ஜயசூரிய (வெற்றி)
மிஸ்ரர் நேர்போட் பெரிஸ்
மிஸ்ரர் P. J. கொனிஸ்
டக்ரர் D. A. ஜயசிங்கி
மிஸ்ரர் P. S. P. ஜயதிலகை
முதலியார் H. W. டீ, ஸொய்சா

### 500000 தங்கப்பவுண்

இற்றலிய அபிசீனிய யுத்தம் நடக்கும் இக் காலத்தில் பிரிட்டிஷ அரசினர் தற்பாதுகாப்புக் கருதி மத்தியதரைக் கடலில் தமது கப்பற் படையை நிறுவியிருக்கின்றனர். இக் கப்பற்படைக்கு மாதந்தோறும் 500000 தங்கப்பவுண் செலவாகின்றது எனச் சென்ற 2ம் தேதி பிரிட்டிஷ பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

### பிரிட்டிஷ் எகிப்திய உடன்படிக்கை

பிரிட்டிஷ் அரசினர்க்கும் எகிப்திற்கும் இடையே, சமத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட ஓர் உடன்படிக்கை தயாரிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இதற்கான மகாநாடு ஒன்று கெய்ரோவில் நடைபெறுகின்றது

### "சீதா கல்யாணம்"

நாளை வெள்ளிக்கிழமை தொடக்கமாக யாழ்ப்பாணம் றீகல் பேசும் படக்காட்சி மண்டபத்தில், கல்கத்தா பிரபாத் கம்பனியாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் சீதா கல்யாணம் என்னும் பேசும் படக்காட்சி காண்பிக்கப்படும்: இதில் மாஸ்டர் இராஜா, குஞ்சிதம், வெங்கிட்டராவ் முதலியோர் நடிக்கின்றனர்.

### "நான் தோற்றால் பலஇடங்களில் அழுவார்கள்"

மாத்தளைப் பகுதித் தேர்தலின்பின்னர் நிகழ்ந்த குழப்பாக்கிச் சம்பந்தமான விசாரணை சென்ற செவ்வாய்க்கிழமை மீண்டும் நிகழ்ந்தது. அப்போது ஒருவர் சாட்சியம் கூறுகையில் மிஸ்ரர் அலுவிகாரையுடன் எதிரிடையிட்ட மிஸ்ரர் W. T. B. கரியலாடை என்பவர் தான் தோற்றால் பலவிடங்களில் அழுகைக்குரல் கேட்கும் என ஓர் பிறத்தாருக்குச் சொன்னதைத்தான் கேட்டதாகச் சொன்னார்.

மிஸ்ரர் கரியலாடையும் சிறையாக்கப்படுவார் என்பதற்கான அறிகுறிகள் தோற்றுகின்றன.

# இந்திய அரசியற் குறிப்புக்கள்

### பிரான்சிய பத்திரிகாசிரியர்

பிரான்ஸில் பிரபல பத்திரிகாசிரியரான சிதான் பெணாகே என்பவர் டக்டர் தாகூரின் சாந்திநிகேதனத்திற சிலமாதங்கள் தங்குவதற்காக வந்திருக்கிறார். அவரைச் சில பத்திரிகைகாரர் கண்டு சம்பாஷித்த போது அவர் கூறியதாவது:-

'இந்திய நாகரிகத்திலும், டக்டர் தாகூரின் சர்வதேச சர்வகலாசாலையிலும் பிரான்ஸிய மக்கள் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருக்கின்றனர். பிரான்சிற்கும் இந்தியாவுக்கும் கலை வளர்ச்சி விஷயத்தில் இணக்கம் ஏற்படும் என்றும், கீழ்நாடுகளுக்கும்மேல் நாடுகளுக்கும்நெருக்கியசம்பந்தம் ஏற்படுவதை யொட்டி ஐரோப்பிய மாணவர்கள் விஸ்வ பாரதிக்கு அனுப்பப்படவேண்டுமென்றும் பிரான்சின் சங்கம் அபிப்பிராயப்படுகிறது"

### சர்வசமய சமரச மகாநாடு.

ஸ்ரீ இராமகிருஸ்ண பரமஹம்ஸரின் சதாப்தியை முன்னிட்டு நாகபுரியில் சர்வ சமயசமரச மகாநாடு ஒன்று இன்னும் இரண்டொரு தினங்களிற் கூடும் என்றும் காசிபீடப் ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சார்யரான டக்ரர் குருத்கோடி அம்மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

### பதவி எதிர்ப்புப் பிரசாரம்.

சில தினங்களுக்கு முன் காங்கிரஸ் அபேதவாதக் கட்சிக் காரியதரிசி ஸ்ரீஜுத் M. R. மஸானி அவர்கள் கல்கத்தாவுக்குச் சென்று அங்கே, காங்கிரஸ்காரர், வரப்போகும் அசெம்பிலியில் மந்திரப் பதவிகள் ஏற்க வொண்ணாது என்பதற்கு ஆதரவு தேட முயற்சித்திருக்கிறார். சென்ற வாரம் வங்காளத்து அபேதவாதக் கட்சியின் ஆதரவில், பதவி ஏற்பதை எதிர்ப்பது சம்பந்தமாக ஓர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தாம் வரமுடியாமை பற்றி வருந்துவதாகவும், ஆனால் இதன் நோக்கத்தில் தாம் அனுதாபங் கொள்ளுவதாகவும் ஸ்ரீஜுத் சரத் சந்திரபோஸ், ஸ்ரீஜுத் மஸானிக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார்.

### ஷவுக்கத்தலிதடை நீக்கம்

சென்ற ஜூன் மாதம் 21-ம் தேதி பன்று மௌலானா ஷவுக்கத் அலி சிந்துக்குள் போகக் கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவு சென்றவாரம் நீக்கப்பட்டுவிட்டதாக, பம்பாய் பொலிஸ் அதிகாரியிடம் இருந்து மௌலானா ஷவுக்கத் அலிக்குக் கடிதம் கிடைத்திருக்கிறது.

### உத்தியோக எதிர்ப்பு

சென்ற வாரம் பம்பாயில், காங்கிரஸ் அபேதவாதக் கட்சியின் ஆதரவின் மந்திரிப்பதவிகளைக் காங்கிரஸ் வாதிகள் எதிர்ப்பதற்கான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக் கூட்டத்திற்கு ஜனப் பரிதுல் ஹக் அக்கிராசனம் வகித்தார். காங்கிரஸ் வாதிகள் சட்டசபைக்குட் புகுந்துவிட்டதால் மந்திரப் பதவிகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற வாதம் அர்த்தபுஷ்டியற்றது என்றும் பிரிட்டிஷ் அரசியல்முறையை இந்தியாவில் ஒப்பிடுவது சரியல்லவென்றும் இங்கே சட்டசபைகளுக்குப் பூரண அதிகாரம் இல்லையென்றும் அவை வெறும் பிரசாரமேடைகளாய் மாத்திரமே யிருக்கின்றன வென்றும், புது அரசியலில் வேலை செய்து பார்க்கக்கூடிய நல்ல அம்சம் எதுவும் இல்லாதநினால்தான் மந்திரப் பதவி ஏற்பதைத்தாம் எதிர்ப்பதாகவும் ஸ்ரீஜுத் புருஷோத்தம தாஸ் திரிகம தாஸ் கூறினார்.

அக்பிர் தயாரித்த அரசியற் திட்டம் எதனையும் இந்திய மக்கள் ஏற்கவொண்ணாது என டக்டர் மாலிக அங்கலஸாரியா கூறினர்.

### ஸ்ரீஜுத் சத்திய மூர்த்தி.

ஸ்ரீஜுத் S. சத்திய மூர்த்தி அவர்கள் காங்கிரஸ் பிரசாரத்திற்காக ஆறியானா, ஜலந்தர், லாகூர், அம்பாலா முதலியவிடங்களுக்குப் பிரயாணமானார்.

### சமஸ்தானாதிபதிகள் சபை.

இந்தியச் சமஸ்தானாதிபதிகள் சபை விஷயத்தில் இப்போது மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிரந்தரச்சபை அங்கத்தவர்கள் 5 பேரில் டோல்பூர் மகாராஜா, பன்னா மகாராஜா, நவாஸ் மகாராஜா, ஆகிய மூவரும் இராஜிநாமாச் செய்து கொண்டனர் மற்றும் சிலரும் விலகி விடுவர் என அஞ்சப்படுகிறது. சமஸ்தானாதிபதிகள் சபையைப் பெரிய சமஸ்தானாதிபதிகளும் சேரக்கூடியபடி திருத்தி அமைக்காவிட்டால் தாம் தம் காரியதரிசிப் பதவியினின்றும் விலகப் போவதாகப் பட்டியாலா மகாராஜா சில தினங்களுக்கு முன் எச்சரிக்கை செய்திருக்கிறார்; வருகிற ஏப்ரல்மாதத்தில் சமஸ்தானாதிபதிகள் சபையைக் கூட்டும்படி இராஜப் பிரதிநிதி வேண்டிக் கொள்ளப் படுகிறார். நிரந்தரச் சபை அங்கத்தவர்கள் பலர் விலகிவிட்டபடியால் சபையைக் கூட்ட வேண்டியது ஆவசியகமாகிறது. இப்போது இச் சபையில் சிறிய சமஸ்தானாதிபதிகளே பெருந் தொகையினராக இருக்கின்றனர்.

### அகில இந்தியா பிராமணரல்லாதார் கக்ஷி

பிராமணரல்லாதார் கக்ஷியை மீண்டும் பூரணமான ஒரு கக்ஷி யாக்குவது அகில இந்திய விஷயமானதாகும். மேலும இந்தியாவில் பலபாகங்களிலுமுள்ள தலைவர்களையும் கலந்துகொள்ள வேண்டுவதும் அவசியம். ஆகவே பம்பாய் பிராமணரல்லாதார்கக்ஷியின் நிர்வாகச் சபை இக்கக்ஷியை ஒரு அகில இந்தியக் கக்ஷியாக்குவது பற்றிய ஆலோசனையை ஒத்தி வைத்துவிட்டது. மிகவும் சீக்கிரமாக பம்பாயில் இந்தியாவின் பலபாகங்களிலுமுள்ள தலைவர்கள் சேர்ந்த ஒரு கூட்டம் நடைபெறும். அவ்வமயம் இக்கக்ஷியின் நிர்வாகத் திட்டங்கள் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்படும்.

### புதிய இந்திய மாகாணங்கள்.

புதிய இந்திய மாகாணங்களாகிய சிந்து ஒரிஸா இவ்விரண்டிற்கும் முறையே ஸர் லான்ஸிலாட்கிரஹாமையும் மிஸ்டர் ஜான் ஆஸ்டன் ஹப்பாக்கையும தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

### சங்கீத மகாநாடு.

டில்லி சங்கீத சமிதியின் ஆதரவில் அகில இந்திய சங்கீத வித்வான்கள் மகாநாடு ஒன்று மார்ச்சு மீ 6, 7, 8, ம் தேதிகளில் நடைபெறும் இந்தியா வெங்குமிருந்து பேர்பெற்ற சங்கீத வித்வான்கள் விஜயம் செய்வார்கள். பல சங்கீதக் கச்சேரிகள் நடைபெறும். அதில் வரும் வருமானத்தை இந்திர பிரஸ்த பெண்கள் கல்லூரிக்குக் கொடுத்து தவத் தீர்மானித்திருக்கிறார்கள் கர்நாடக சங்கீதக் கச்சேரி நடனம் முதலியவைகளும் நடைபெறும்.

### முஸ்லீம்தலைவர்கள் மகாநாடு.

அகில இந்திய முஸ்லீம் மகாநாட்டு நிருவாகசபைக் கூட்டமொன்று சென்ற வாரம் கனம் ஆகாகான் தலைமையில் டில்லியில் கூடியது. இக் கூட்டத்தில் முஸ்லீம்கள் பிற்காலத்தில் ராஜீயத் துறையிலும் பொருளாதார துறையிலும் அனுஷ்டிக்க வேண்டிய வேலைத்திட்டம் நிர்ணயிக்கப்பட்டது. மத்திய சட்டசபை அங்கத்தினர்களும் முஸ்லீம் மகாநாட்டு நிருவாகசபை அங்கத்தினர்களும் வந்திருந்தனர். கனம் ஆகாகான் பிற்கால கொள்கையைக் குறித்து பிரசங்க மொன்று செய்தார். முஸ்லீம் சமூகத்தினர் தங்களுக்குள் கட்டுப்பாடுடனிருப்பதோடு மற்ற வகுப்பினருடனும் கலந்துழைக்க வேண்டுமென அவர் வற்புறுத்தினர்.

# பிராமணச்சிறுவன் ஏமாற்றப்பட்டவிதம்.

## காப்புவிற்று பஸ் பிரயாணம். குடை அடைவுவைத்து தேநீர்ப்பானம்.

## 3-எதிரிகளில் ஒருவர் பிராமணர். நீதிஸ்தலத்தில் விசாரணை விபரம்.

[நமது நிருபர்.]

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சென்ற மார்ச் 3-ந் திகதி வலிகாமத்தைச்சேர்ந்த (1) செல்லையா (2) கார்த்திகேசுஐயர் (3) வல்லிபுரம் ஆகியவர்கள் அவ்வூர் பாலசுந்தரக் குருக்கள் வீட்டில் சமஸ்கிருதம் படிக்கிறதற்காக அனலைதீவிலிருந்து வந்திருந்த சின்னையா ஐயர் இராசா ஐயரென்னும் 13வயதுடைய சிறுவனை ஆசைவார்த்தை கூறி ஏமாற்றிப் பாலசுந்தரக் குருக்களின் பாதுகாப்பிலிருந்து கூட்டிக்கொண்டு புத்தளத்துக்குச் சென்றனர் என்றும் அச்சிறுவனிடமிருந்த காப்பு ஒரு சோடியையும் கழற்றி மோசடி செய்தனர் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக ஸ்ரீ சாம் சபாபதியினதும் ஸ்ரீR.R நல்லையாவினதும் அனுசரணையில் பிராக்டர் ஸ்ரீT. R நல்லையாவும் 1ம் எதிரிக்கு பிராக்டர் செல்வரெத்தினமும் 2-ம் 3 ம் எதிரிகட்கு ஸ்ரீ இராசதுரையின் அனுசரணையின்பேரில் ஸ்ரீ கதிரவேலும் ஸ்ரீ மாசிலாமணியும் வாதித்தனர்.

இராசா ஐயர் என்னும் சிறுவன் கூறியதாவது:-

"இந்த 2-ம் எதிரியும் 3-ம் எதிரியுமாகத்தான் என்னைப் புத்தளத்துக்கு வரும்படியும் அங்கே வந்தால் மாதம் 15 ரூபாவும் நல்ல சாப்பாடு உடுபுடவையும் தருவதாகவும் சொன்னார்கள். வலிகாமப் பிள்ளையார்கோவில் ஒழுங்கையில் வைத்துத்தான் கடைசித் தடவை கேட்டவர்கள். நான் சம்மதித்தேன் என்னைப் பொக்கணை என்னும் ஓர் பனை வளவுக்கு வரச் சொன்னார்கள். நான் அங்கு சென்றேன். இவர்கள் என்னை 1-ம் எதிரியிடம் ஒப்புக்கொடுத்தனர் நானும் 1-ம் எதிரியுமாக கால்நடையில் கொடிகாமம் சென்றோம். அங்கே காசு இல்லாமையால் 1-ம் எதிரி தனது குடையை அடைவு வைத்து 24 சதம் எடுத்துத் தேத்தண்ணீர் குடித்தவர். பனைக்குள் நிற்கும்போதுதான் 2-ம் 3-ம் எதிரிகள் எனது கையிலிருந்த காப்பை ஆளுக்கு ஒவ்வொன்றாகக் கழற்றியவர்கள். கொடிகாமத்திலிருந்து அனுராசபுரத்துக்கு பஸ்ஸில சென்றோம். அங்கே பெற்ரோல் விற்குமிடத்துக்குக் கிட்ட இருக்கும் சிற்றம்பலம் என்னும் ஒருவரிடம் காப்பை விற்கத் தெண்டித்தார். அவர் வாங்க மறுத்தமையால் தட்டானிடம் கொடுத்துக் காசு வாங்கிக்கொண்டு வந்து புத்தளத்துக்குப் புறப்பட்டோம். புத்தளம் சென்றதும் 2ம்எதிரியின் மைத்துனர் வீட்டில் என்னைக்கொண்டுபோய் ஒப்புக்கொடுத்துவிட்டு 1—ம் எதிரி தனது மகள் வீடு சென்றுவிட்டார். இதன் பிற்பாடு என்னை அவ்விடத்தில முன் சொன்னவிதம நடத்தாதபடியால் எனது தகப்பனுருக்கு ஓர் கடிதம் எழுதினேன். அதில் எனது விலாசம் நான எழுதவில்லை. ஆனைப்படம் முத்திரையில் குத்தப்பட்ட "சீலை" கொண்டு தகப்பனுர் அவ்விடம் வந்து என்னையும் கூட்டிக்கொண்டு அவ்வூர் பொலிஸ் ஸ்தானத்துக்குச் சென்று 1-ம் எதிரி என்னை பலாத்காரமாகக் கூட்டிக்கொண்டுவந்ததாக அறிவித்தார். இதன் பிற்பாடு நாங்கள் இருவரும் யாழ்ப்பாணம் வந்து மணியகாரனிடம் (புன்னாலைக்கட்டுவன்) சம்பவம் முழுவதையும் அறிவித்தோம்."

வழக்கு 10-ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

### ஜன நடமாட்டத்திற்கு இடையூறு.

அச்சுவேலியில் வசிக்கும் அருளப்பு யோவான் தனது மோட்டாரத்தை நடுத்தெருவில் விடுத்து ஜன நடமாட்டத்திற்கும் வண்டிச் சஞ்சாரத்திற்கும் இடையூறு விளைத்தார் என யாழ்ப்பாணம் போலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார். எதிரி தான் குற்றவாளியே என்று ஒப்புக்கொண்டதன் பேரில் 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

### இது மெய்யா?

ஜெர்மனியில் ஜிகோஸ்லேவேகியா எல்லைப்புறத்தில் பூமிக்கு அடியில் பல்லாயிரக்கணக்கான எலிகளை வளர்த்து வருவதாகவும், யுத்தமேற்பட்டால் அந்த எலிகளுக்குள், பிளேக் கிருமிகளை "இஞ்செக்ட்" செய்து சத்ரு தேசத்திற்குள் அவைகளை விட்டு விட ரகசிய ஏற்பாடுகள் நடந்து வருகிறதென்றும் பிரேக் பத்திரிகையில் ஓர் செய்தி வெளியாயிற்று இதை ஜெர்மன் அதிகாரிகள் பலமாக ஆட்சேபித்துள்ளனர்.


## இந்தியன் வங்கு.

ஸ்தாபிதம் 1904] [வரையறுக்கப்பட்டது.

தலைமை ஆபீஸ்
சென்னை (மெட்ராஸ்)

யாழ்ப்பாணக் கிளை ஆபீஸ்
(பெரிய கடை)

சகாயமான வட்டிக்குக் கடனுக்கும் பொன் நகை, தானியவகை அடைவுக்கும் பணம் கொடுக்கப்படும். எல்லாவகையான பணக் கொடுக்கல் வாங்கல் விஷயங்களும் இங்கே செய்து கொள்ளலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எம்மிடம் அறிந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணக் காரியஸ்தர்.


### கடிதம்.

மலேயன் வைரமுழு சேவை சங்கம்
கோலாலம்பூர்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா,

வைரமுழு சைவ வாலிப சங்கம் என்ற மகுடத்துடன் 10-2-36 13-2-36 ல் வெளிவந்த தங்கள் பத்திரிகைகளில் ஸ்ரீ கணேச வித்தியாசாலை நிருவாகத்தைக் குறித்து மேற்படி வை. சை. வா. ச சபையார் கூட்டிய கூட்டங்களையும் அக்கூட்டங்களில் அவர்கள் செய்துகொண்ட தீர்மானங்களையும், மலேயன் வைரமுழு சேவை சங்கம் நிராகரிக்கிறது. பள்ளிக்கூட உரிமை ம. வை. சே சங்கத்தாருக்கே உரியதென்றும் அவர்களின் அநுமதியின்றி யார் யார் என்ன நடவடிக்கைகள் எடுத்தாலும் அவைகள் பெருவென்றும் இத்தால் வெளிப்படுத்துகிறோம். வை சை வா சங்கம் ஒரு சிலரால் மாத்திரம் பிரமாணத்திற்கு மாறாக நடாத்தப்பெற்று பள்ளிக்கூட மனேச்சரை அவதூறாகக் கண்டித்த பத்திரிகையில் பிரசுரம் செய்ததை மலேயன் வைரமுழு சேவை சங்கம் பலமாகக் கண்டிப்பதுடன் தக்கநடவடிக்கைகள் தந்தி மூலமாக எடுத்திருக்கிறார்கள் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகிறோம்.

வ. சினியப்பா
கௌரவ காரியதரிசி.

ம. வை. சே. சங்கம்
கோலாலம்பூர்
25-2-36

### புளியங்கூடல் மஹாமாரி வாசகசாலை

௩-வது ஆண்டு நிறைவு விழா

நிகழும் யுவ வருஷம் மாசி மாதம் கூஉ (21-2-36) வெள்ளிக்கிழமை சிவராத்திரியன்று மாலை ஆறரை மணியளவில் புளியங்கூடல் அம்பாள் சந்நிதியில் திரு. வை. விஜயரத்தினம் அவர்கள் தலைமையின் கீழ் மஹாமாரி வாசகசாலையின் மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. அப்பொழுது தலைவரவர்கள் முன்னுரையாக சில சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் காரியதரிசி தனாதிகாரி அவர்களால் அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. பின்னர் வாசிகசாலை உத்தியோகஸ்தர்களாக

போஷகர்கள் வ சே மகுந்தராப், சு கோபாலபிள்ளை, வே. செல்லையா

அக்கிராசனர்கள் பொ. ஆறுமுகம், க. குமாரசுவாமி

காரியதரிசிகள் நா. விசுவலிங்கம் சி. குருசாமி

தனாதிகாரி சு. கந்தையா

கணிதபரிசோதகர் த சி. சப்பத்தன்.

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் ஆசிரியர் திரு N நாராயணன் B A, B L, L T அவர்கள் சிவராத்திரி என்னும் பொருள்பற்றி சிறந்த ஓர் விரிவுரை நிகழ்த்தினர். பின்னர் ஸ்ரீமத் குரு சி. மாணிக்கத்தியாகராச பண்டிதர் அவர்களால் கதாப்பிரசங்கமாக காரைக்காலம்மையார் சரித்திரம் பிரசங்கிக்கப்பட்டது நாலரை மணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் முடிவெய்தியது.

### மாணவர்க்கு

மாணவர்கள் மனப்பாடம் செய்தவுடன் படுத்துத் தூங்கிவிட்டால், 24 மணி நேரத்திற்குப் பின்பு அவைகளில் பெரும்பகுதி ஞாபகத்திலேயே இருக்கும்- சுலபமாக திருப்பி ஒப்புவித்து விடலாம். மனப்பாடம் செய்தபின் சில மணி நேரம் கழித்துத் தூங்கினுல் பெரும்பகுதி ஞாபகத்திற்கு வருவதில்லை என்று அமெரிக்கா மனோசாஸ்திர பண்டிதரான டக்டர் எச். எம். ஜான்சன் கூறுகிறார்.

# இற்றலிக்கு பெரும்வெற்றி!

## முசோலினியின் அண்டப்புழுகு. 3000-அபிசீனியர் கொலையாம்

சென்ற மாதம் 27-ம் தேதி யாரம்பமாய தெம்பியன் மகா யுத்தத்தில் இற்றலியர் பூரணமான வெற்றி யடைந்திருக் கின்றனர் என்று இற்றலியச் செய்தி ஒன்று கூறுகிறது.

ரூஸ்கஸா என்னும் அபிசீனியச் சேனைபதியின் வீரர்களை முற்றுகையிட இற்றலியர் முயற்சி செய்தனர். இம்முயற்சியைப் பங்கப்படுத்துதற்கு அபிசீனியர் தம்மாலானவரை பாடுபட்டும் வாய்க்கவில்லை. அபிசீனியர் தமது உயிரைத் திரணமாக மதித்துப்போராடினர். ஆனால், கற்றில் அபிசீனியச்சேனை முற்றாக முறியடிக்கப்பட்டது. பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் இற்றலியரால் கைப்பற்றப்பட்டன. பன்னூற்றுக் கணக்கான அபிசீனிய வீரர் சிறையாயினர்.

இந்த யுத்தத்தில் எல்லாமாக 3000 அபிசீனியர் இறந்தனர் என்று இற்றலியச் செய்திகள் கூறுகின்றன.

### முசோலினி புழுகு.

சென்ற 1-ம் தேதி ரோமாபுரியில் ஓர் மாபெரும் கூட்டம் நிகழ்ந்தது. அக் கூட்டத்திற்கு முசோலினியும் இற்றலிய மன்னரும் விஜயம்செய்தனர். அப்போது முசோலினி பின்வருமாறு கூறினர்:

"எமது வீரர் அபிசீனியாவில் முன்னேறிக் கொண்டே வருகின்றனர். இது உண்மை: இந்த உண்மை இன்னும் சில தினங்களில் துலாம்பரமாக வெளிவரும்.

"இன்று இற்றலிய மக்களுக்கு ஓர் பெருங் கொண்டாட்ட தினமாகும். நாம் எமது மேன்மையை, வீரப்பிரதாபத்தை உலகினர்க்குக் காட்டியிருக்கிறோம்.

### தற் கொலையா?

ரூஸ்கஸா என்னும் அபிசீனியச் சேனைபதி தற்கொலைசெய்திறந்தார் என்று ஓர் செய்தி கூறுகிறது. ஆனல் இது இன்னும் உர்ஜிதம் செய்யப்படவில்லை.

### தேகவியோகம்.

ஸ்ரீ வி. அம்பலவாணர்.

வரணி இடைக்குறிச்சியை வாசஸ்தானமாக வுடையவரும், வரணி வடக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலை, வரணி இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாசாலைகளின் உபமனேஜரும், வரணிச் சைவமகாசபையின் உபாக்கிராசனருமாகிய திருவாளர் விசுவநாதர் அம்பலவாணர் அவர்கள் பலமாசங்களாய்ப் பிடித்திருந்த நோய் காரணமாக, இந்த மாதம கூ-ந்தேதி (25-2-36) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணியளவில் தமதில்லத்தில் தேகவியோமாயினர். அவரது அந்தியக்கிரியைகள் வரணி கரணவாய் சைவக்குருமாரா லன்று மாலை ஆறு மணியளவில் நன்கு நடாத்தப்பட்டன. கடித.

### பணத்தை மறைத்துவைத்த தந்தை.

பிட்டிஸ்பரோ வென்னுமிடத்தைச் சேர்ந்த ஒருவன் சென்ற 3 வருஷங்களாக ஓர் மெத்தையை உபயோகித்துவந்தான். அம் மெத்தை அவனது தகப்பனுருடையது. புதிய ஊசை அடைக்க அதைப் பிரித்தபோது அதிலிருந்த 480 பவுனுக்கு பாங்க் நோட்டுகளகப்பட்டன.

### விவாக முறை.

விவாகத்திற்கு முன்பாக மணமகனும் மணமகளும் டாக்டர் பத்திரம் பெறவேண்டு மென்றும் அவ்வித பத்திரம் பெற்றவர்களே விவாகம் செய்து கொள்ளலா மென்றும் ஐரோப்பிய நாடுகளில் ஓர் இயக்கம் தீவிரமாகப் பரவி வருகிறது.


வெளிவந்து விட்டது!

## தஞ்சை வாணன் கோவை

சொக்கப்ப நாவலருரை

பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்.

(வித்துவான் பரீக்ஷை [மதுரைத் தமிழ்ச்சங்கப்] பாலபண்டித பரீக்ஷைகட்குப் பாடமாக நியமிக்கப்பட்டுள்ள இலக்கியம்.)

இப்பதிப்பு, சென்னைச்சர்வகலாசங்கத்தாரால் வித்துவான் பட்டம் வழங்கப் பெற்றவரும், யாழ்ப்பாணம் — ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்துப்பரீக்ஷகரில் ஒருவரும் ஆகிய சிதம்பரம் ஸ்ரீமத் ந. சுப்பையபிள்ளை அவர்களால் பல ஏட்டுப்பிரதி கொண்டு திருத்தம் பெற்றது; பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புரை, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, விஷயசூசிகைமுதலாயின சேர்க்கப் பெற்றது. யாழ்ப்பாணம் - சைவபரிபாலனசபையாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. "பெதர்வெய்ட்" பேப்பர் "டெமி" எட்டுப்பிரமாணங் கொண்ட 400 பக்கங்களை உடையது.

விலை: (காலிகோ பயிண்டு) ரூபா. 3 அணா 8
" (சாதா " ) " 3 —

தபால் (பார்சல்) சார்ஜ் { இலங்கை-இந்தியாவுக்கு அணா—4. மலாய்நாடு முதலியவற்றிற்கு " —6.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசேஷ கமிஷன்கொடுக்கப்படும். பெறவிரும்புவோர், பின்வரும் விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
யாழ்ப்பாணம்.

## காந்திஜியின் புத்திரர்

### கிறிஸ்தவராகப் போவதில்லையாம்.

"மதமாற்றத்திற்கு நான் விரோதமே"

காந்திஜியின மூத்த புதல்வர் ஸ்ரீமான் ஹிராலால் காந்தி தாம் கிறிஸ்தவ மதத்தில் சேர விரும்பவில்லையென்றும், அது விஷயமாக தாம் ஒரு முடிவான தீர்மானத்திற்கு வந்துவிட்டதாகவும் 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இதற்கு முன் அவர் எழுதிய கடிதத்தில் உள்ள விஷயங்களைப்பற்றியும் நிலைமையைப் பற்றியும் தாழ்மையான முறையில் புகார் செய்துகொண்டதாகவும் ஹிந்து சமூகத்தை விட்டு தாம் நீக்கப்பட்டுவிட்டதைத் தெரிவித்துக்கொண்டதாகவும் ஸ்ரீமான் ஹிராலால் அறிவிக்கிறார். அவர் கூறியிருப்பதாவது:—

"நான் மதத்தை மாற்றவேண்டுமென்ற எண்ணத்தோடு ஒன்றும் சொல்லவில்லை. ஒருவர் தம்முடைய சொந்த மதத்தை விட்டு வேறொரு மதத்தைத் தழுவுவதற்கு நான் எப்பொழுதுமே விரோத மனப்பான்மை கொண்டவன். அதுமட்டுமில்லை யார் யார் தங்கள் மதத்தை விட்டு வேறு மதத்தைத் தழுவியிருக்கிறார்களோ அவர்கள் திரும்பி தங்கள் தங்கள் மதத்தில் வந்து சேர்ந்துவிட வேண்டும். ஒரு சமூகத்தில் ஒருவர் பிறந்து வளர்ந்துவிட்டாரானால் அவன் அதற்கு அதன் மூலமே ஒரு விதத்தில் கடன்பட்டிருக்கிறான். அதைக் கைவிடுவதற்கு அவனுக்கு உரிமை கிடையாது."

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாரஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதப்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
**க. ஆறுமுகம்பிள்ளை,**
வெருகல் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு
Y55 1-1-34 to 31-12-36) இலோன்,


## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோவிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சுஒன்றுக்கு சதம் —50
ருத்தல் ஒன்றுக்கு ரூபா **40**

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள்தங்கம், புனுகு, பச்சைக்கர்ப்பூரம், ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை சாம்பிராணி பதங்கம், தைலம், முதலியவைகளும், செண்ட், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச் சரக்குகளைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. அபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருச்சி டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெறவிரும்புவோர், நாலிலொருபாகத்தை முன்பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்,

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.
Q. 240 1-1-36 to 31-3-36.

## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
**38, 3rd Cross Street, Colombo.**    **Telephone No. 30**
(Y. 56. 8-2—7-2-36)

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா
25ம்ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும்,சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(Y. 189. 1-11-35 to 31-10-36.)


"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."


"இரகி பன்மத"

## சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள **"சித்த" ஔஷதாஸ்ரமம்,**
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India.**
H 208. 1-12-35 to 31-5-36

திறம் தேக்கமரம்    பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சீயம் தேக்கமரங்கள்    ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள்    ரூபா 2-75சதந் தொடக்கம்

## இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

**சி. வீரகத்திப்பிள்ளை** அண்டு சன்ஸ்
(Y 57. 1-5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.


## பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| (நகரசங்க எல்லைக்குட்பட்ட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
தும்பனித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 5th March 1936